உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 33 | ஆனந்த - ஆனி - 10—7—74 | இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

தெய்வ பக்தியும் தேச பக்தியும்

பக்தி என்பது மிகப் புனிதமான ஒன்று. இது, தெய்வம் அல்லது கடவுள் தொடர்பானவற்றிற்கே உரியது. ஆயினும், தெய்விகத் தன்மையுடைய பிற இடங்களுக்கும் உரியதாக இது வழங்கப்படுகின்றது. தெய்வ பக்தி, கடவுள் பக்தி என்பன போலவே குரு பக்தி, இராஜ பக்தி என்பனவும் பேசப்படுகின்றன. முடியாட்சி யின்றிக் குடியாட்சியே எங்கும் நடைபெறுகின்ற இக் காலத்தில் இராஜ பக்தி என்பதற்கு ஈடாக, 'தேச பக்தி' என்று சொல்லப்படுகின்றது.

"அனைவோர்க்கும் தெய்வம் - இலைமுகப் பைம்பூண் இறை" என்ற குமர குருபரர் வாக்குப்படி அரசன் தெய்விகத் தன்மை உடையவனாக அக்காலத்தில் போற்றப்பட்டான். திருவள்ளுவரும் அரசனை, 'இறை' என்னும் பெயரால் குறித்ததுமட்டுமன்றி,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்று விளக்கமாகவும் கூறிப் போந்தார். எனவே மக்கள் அரசன்மீது கொள்ளும் அன்பு, அவனிடத்தில் காட்டும் பணிவு முதலியவற்றை, 'பக்தி' எனக் குறித்தல் பொருந்துவதே யாகும். இதனால், அரசனிடத்தில் கொள்ளும் பற்று முதலிய வற்றை நாட்டின்மீது மக்கள்கொள்ளும் காலத்தில் அவையும் பக்தியாகின்றன. அப்பொழுது நாடும் தெய்வத்தன்மை உடைய தாகவே மதிக்கப் பெறுகின்றது.

"வந்தே மாதரம் என்போம் - எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்"

என்ற பாரதியார் பாடலில் இக் கருத்துத் தெளிவாய்ப் புலப் படுதல் காணலாம். ஆகவே, 'தேச பக்தி' என்பதும் தெய்வ பக்தியின் அடிப்படையிலே அமைந்திருத்தல் தெளிவாகின்றது. அதனால், நாட்டைத் தெய்வத் தன்மை யுள்ளதாகவும், 'நாட்டு மக்கள் அனைவரும் இறைவன் மக்கள்' என்ற வகையில் ஒரு குலம் அல்லது உடன் பிறந்தவர்கள் என்பதாகவும் எண்ணு கின்ற தெய்விக மனப்பான்மை உள்ளவர்களுக்கே தேச பக்தி யும் உண்மையான பக்தியாய் விளங்குவதாகும். அவ்வாறின்றி, வெறும் புகழ்ச்சிக்காக அல்லது பாராட்டுதலுக்காக 'மாநிலத் தாய், (இந்தியத்தாய்) தேச பக்தி' என்றெல்லாம் சொல்வது உண்மைப் பக்தியாதல் இயலாது.

'கடவுள் ஒருவர் இருக்கின்றார்; அவர் மக்களுக்கு நன்மை தீமைகளை அறிவித்தற்கு வேதாகமங்களை அருளிச் செய்துள் ளார்; அவற்றின்படி நடந்தாலே அவரது அருளை நாம் பெற முடியும்; தவறி நடந்தால் அவருடைய சினத்திற்கு ஆளா வோம்' என்ற எண்ணத்தை அழுத்தமாகக் கொண்டு, அதற்கு ஏற்க நடப்பதே உண்மையான தெய்வ பக்தி. இந்த உண்மைத் தெய்வ பக்தி உள்ளவர்களிடத்தில் தேச பக்தி தானாகவே அமைந்துவிடுகின்றது.

'சமதருமக் கொள்கை' என்பதே இக் காலத்தில் தேச பக்தியாகப் போற்றப் படுகின்றது. அதாவது, தனி மனிதன் எவனும் தான்மட்டுமே செல்வத்தை மிகக் குவித்து நல்வாழ்வு வாழ்தல் என்பது இல்லாமல், எல்லா மக்களும் பொருளாதார நிலையிலும், மற்றை வாழ்க்கை நலங்களிலும் சம நிலை பெறுதற்கு உரியதாக வாழவேண்டும் என்றாண்ணமும், அதற்கேற்ற நடை முறை ஒழுக்கமும் உடையவர்களாய் இருத்தலே தேச பக்தி என்று இக் காலத்தில் சொல்லப்படுகின்றது. ஆனால், இது சட்டத்தினால் மட்டும் ஏற்பட்டுவிடாது. ஒவ்வொரு தனிமனித னுக்கும் இஃது உயிர்க் கொள்கையாக உள்ளத்தில் அமைய

வேண்டும். அது முன்சொன்ன உண்மைத் தெய்வ பக்தி யினால்தான் உண்டாக முடியும்.

இன்றைய சட்டம் மட்டும் அன்று ; நமது பண்டைய உபநிடதங்களுள் 'ஈசாவாஸியம்' என்ற உபநிடதம் அனைத்துப் பொருளும் இறைவனின் உடைமை; யாருக்கும் உரிமை உடையது அல்ல பலரிடத்திலும் இருக்கும் பொருள்களுக்கு அவரவரும் தருமகர்த்தா நிலையிலேயே உரியவர் என்கிறது. மகாத்மா காந்தியை மிகவும் கவர்ந்த உபநிடதம் இதுவே. அதனால்தான் சமதர்மக் கொள்கையை வலியுறுத்தத் தொடங்கினர் தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

"இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்"

"ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை"

என்றாற்போலத்தான் சொல்கின்றார். இன்னோரன்ன சுருதி வாக்கியங்களைக் கடவுளின் அருளாணையாக உணர்பவர்கட்குத் தான் தெய்வ பக்தியும் தேச பக்தியும் இருப்பதாகக் கருதப் படுகிறது.

தெய்வ பக்தியும் தேச பக்தியும் உள்ளவர்களிடமே எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்ற எண்ணம் மேலோங்குவதையும் எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் எண்ணும் எண்ணம் அவ் இறையருளாலேயேகிட்டும் என்பதையும் தாயுமானவர் தமது பாடல்களில் கூறியுள்ளமை காணலாம்.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

"எவ்வுயிரும் என் னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே"

சிலர், 'கடவுள் பக்தி' என்பது கடவுளைப் பலவகையிலும் சிறப்பாக வழிபடுதல், ஜெபம் பாராயணம் முதலியவற்றைச் செய்தல் என்ற இவற்றோடு முடிந்து விடுவதாகக் கொண்டு, உலகியலில் எப்படிவேண்டுமானாலும் நடக்கலாம்; அதற்கெல்லாம் கடவுள் வழிபாட்டைச் சிறப்பாகச் செய்தால் அந்தக் குற்றம் தீர்ந்துவிடும் என்று நினைக்கின்றார்கள். இது தவறான எண்ணம் என்பதை உலக மக்கள் உணர்ந்து கொள்வதற்

ஆகவே இறைவன் சுந்தரர் சூள்பிழைத்துத் துன்புற்ற வரலாற்றை நிகழ்த்திக் காட்டினன்.

“இரப்பவர்க்கு ஈய வைத்தார்; ஈபவர்க்கு அருளும் வைத்தார்;
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்”

என்ற அப்பர் திருவாக்கும்.

“மறைகள் ஈசன் சொல்; அச்சொல்
வழிவாரா தவரை வைக்கும்
சிறைகள்மா நிரயம்”

என்னும் சாத்திரமும், ‘அறநெறியைப் புறக்கணித்துத் தெய்வ பக்தி அமைய இயலாது’ என்பதை இனிது விளக்கி நிற்கின்றன. இந்த உண்மையைத்தான் திருவள்ளுவர்,

“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்”

என்னும் குறளால் விளக்கினர். எனவே, உண்மையான தெய்வ பக்தி உடையவர்களிடத்தில் ஒழுக்க நெறியும் இயல்பாகவே அமைந்துவிடுவதாகும்.

ஆண்டவனிடத்தில் அன்புடையவர்கள் அனைத்து உயிர்களிடத்தும் அன்புடையவர்களாகவே இருப்பார்கள். இதனை,

“......................மகவெனப்
பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்கும்
செல்வக் கடவுள் தொண்டர்”

என்னும் திருமுறையாலும்,

“எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவன் என்று
எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு”

என்னும் சைவசமய நெறியாலும் நன்கு உணரலாம், இவற்றால் இறைவனிடத்தில் அன்பு இல்லாதவர்கட்கு ஏனை உயிர்களிடத்திலும் உண்மை அன்பு உண்டாக வழியில்லை என்பதும் அறியப்படும்.

“ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கன்பு இல்லார்;
எவ்வுயிர்க்கும் அன்பில்லார்; தமக்கும் அன்பில்லார்”

என்று அருளிச்செய்த அருணந்திதேவர்,

“பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை”

எனக் கடிந்து கூறினர். ஆகையால், தெய்வபக்தியில்லாவிடில், எவ்வுயிரையும் தம்முயிர்போல எண்ணும் இரக்கமனப்பான்மையும்,

'நாட்டின் நலமே நமது நலம்' என்று எண்ணும் தேசியமாகிய தேசபக்தியும் உண்டாதல் அரிதினும் அரிதேயாம். ஆகவே, இன்றைய அரசியல் சட்டங்கள் சமதருமக் கொள்கை அடிப்படையில் அமைந்து, அவற்றைச் செயற்படுத்த அரசு எத்துணையோ முயற்சிகளைச் செய்தபோதிலும், பொது நலம் இன்றித் தன்னல மனப்பான்மையே வளரவும், அது காரணமாகப் பதுக்கல், கொள்ளை லாபம் பெற முயலுதல் முதலியவை பரவலாக நிகழவும் காண்கின்றோம். மக்கள் ஆட்சியில் அரசாங்கமும் இவற்றை முற்றிலும் கண்டித்துக் களைய முடியாத நிலை உண்டாகின்றது. நாட்டில் இத்தகைய குறைபாடுகள் நீங்கி உண்மைத் தேசபக்தி வளர்ந்து நல்லாட்சி விளங்கவேண்டுமானல், தெய்வ பக்தியை மக்களிடையே வளர்க்க அறிஞர் அனைவரும் முற்பட வேண்டும். அந்த ஒன்றைத்தான் இங்கு நாம் வற்புறுத்திக் கூற விரும்புவது. இவ்வுண்மையை அனைவரும் சிந்தித்துத் தெய்வபக்தி மூலமாகத் தேசபக்தி செழிக்கச்செய்து, நாடு நலம் பெறக் காண்பார்களாக.

"7 பாபங்களை" அகற்ற

இந்திய ஜனாதிபதி வி. வி. கிரி அவர்கள் வலியுறுத்தல்

(1) கோட்பாடுகள் இல்லாமல் அரசியல் நடத்துவது (2) உழைக்காமல் செல்வம் சேர்ப்பது (2) மனச்சாட்சி இல்லாமல் இன்பம் துய்ப்பது (4) நற்பண்பு இல்லாமல் அறிவாற்றல் பெறுவது (5) அறநெறிகளைப் பின்பற்றுமல் வர்த்தகம் செய்வது (6) மனிதாபிமானம் இல்லாமல் விஞ்ஞானத்தை வளர்ப்பது (7) நோன்பு அல்லது தியாகம் இல்லாமல் வழிபாடு நடத்துவது ஆகியவற்றினல் ஏற்படக்கூடிய ஆபத்து பற்றி 1921-ம் ஆண்டிலேயே மகாத்மா காந்தி, நாட்டுமக்களை எச்சரித்தார். இந்த ஏழு பாபங்களும் இன்றைய நமது சமுதாயத்தில் அதிக தீவிரமாக உள்ளன.

நன்றி — தினமணி 27—6—74.

உ

குருபாதம்

தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவில்
சமயப் பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்து
திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

அருளுரை

1—6—1974.

" வழுவிலாது உன்னைவாழ்த்தி வழிபடும் தொண்டனேன் உன்
செழுமலர்ப் பாதங்காணத் தெண்திரை நஞ்சம்உண்ட
குழகனே கோலவில்லி கூத்தனே மாத்தாயுள்ள
அழகனே ஆலவாயில் அப்பனே அருள்செயாயே "

— அப்பர்.

பெருவிழா :

நமது தருமையாதீன முதற் குருமூர்த்திகளாக விளங்கும் ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜைத் திருநாளை ஒட்டி இங்கே பத்துநாள் பெருவிழா இன்று முதல் தொடங்கி நடைபெறுகிறது. பெருவிழா என்பதை வடமொழியில் மகோற்சவம் என்பர். தமிழில் பெருவிழா என அழைக்கிறோம். ஒருகாலத்தில் தமிழில் உள்ளவற்றை வடமொழிச் சொல்லால் சுட்டுவதைப் பெருமையாகக் கருதினர். தற்போது வடமொழியில் சொல்லாது தமிழில் சொல்வது பெருமையாகவும் உரிமையாகவும் கருதப்படுகிறது.

சமயப் பயிற்சி வகுப்பு :

பெருவிழா என்றால் எல்லாவிதமான அங்கங்களும் இருக்க வேண்டும். குழந்தைகள் – பெரியவர்கள், கற்றோர்கள் கல்லாதவர்கள், ஆண்கள் – பெண்கள் என்ற பலதரப்பட்டவர்களுக்கும் விருப்பமான நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம்பெற வேண்டும். பெருங்காப்பியம் என்ற காப்பிய வகையில் பல்வேறு வகைப்பட்ட உறுப்புக்கள் - சுவைகள் இருக்கவேண்டுமென்று இலக்கணங்கள் கூறுகின்றன. அதுபோலவே இங்கு நடைபெறவிருக்கும்

குருபூஜைப் பெருவிழாவில் மக்களை ஈடுபடுத்த சொற்பொழிவு, இன்னிசை, கதாகாலட்சேபம், நாதஸ்வர இசை போன்ற நிகழ்ச்சிகள் துணைசெய்கின்றன. அவற்றைப்போல இந்த சமயப்பயிற்சி வகுப்பும் விழாவின் முக்கியமான அங்கமாக அமைகிறது. விழாத் தத்துவம் என்ன என்பதனை உணரவும், விழாவின் பயனை உணரவும், சமய நுணுக்கங்களையும், சமயக் கோட்பாடுகளையும் தக்கார் பலர் கூடித் தெரிந்துகொள்வதற்காகவும், இவ்வகுப்பு இங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வகுப்பில் வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், சாத்திரம், தோத்திரம் போன்றவற்றின் பல்வேறு கருத்துக்களோடு நமது ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீகுருஞானசம்பந்தப் பெருமானின் அருள் வரலாற்றையும், அவர்தம் அருள் நூல்களையும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குறிக்கோள் :

ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவநெறியை நமது நாட்டில் தோத்திரங்களாலும், சாத்திரங்களாலும் விளங்கவைத்த அருளாளர். சாத்திரத்தை உலகில் உபதேச வாயிலாகப் பரவச் செய்தவர். தம் நூல்கள் வாயிலாகவும் தம் சீடர்கள் வாயிலாகவும் சிவநெறி வளர்த்தவர். அவர்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதும், அவர்கள் கருத்துக்களைப் பரப்புவதுமே நமது நோக்கமும் கடமையுமாகிறது.

திருநாட்கள் :

பெரியவர்களின் திருநாட்கள் புனிதநாட்கள், அந்நாட்களை நாம் கொண்டாடி மகிழ்தல் வேண்டும். ஆனால் நாமோ புனிதமான நாட்களை வெறும் விடுமுறைநாள் என (Holiday) நினைத்து வேலை ஏதும் இன்றி அவமே கழித்து வீணடிக்கிறோம். பெரியவர்கள் திருநாட்கள் விடுமுறை நாட்கள் (Holiday) அன்று. அவை புனிதநாட்கள் (Holiday). அந்நாட்களில் அப்பெரியவர்களை நினைவு கூர்வதையும் அவர்கள் நெறிநின்று பணிபுரிவதையும், அவர்கள் கோட்பாடுகளைப் பரப்புவதையுமே நாம் விரும்பிச்செய்தல் வேண்டும். அவ்வப்பெரியார்களின் வாழ்வியல் நெறிமுறைகளை இயன்றவரை அவர்கள் திருநாட்களில் நிறைவேற்றவேண்டும். உதாரணமாகக் கண்ணப்பர் திருநாளில் கண்ணில்லாதவர்க்கு உதவுதல். இளையான் குடிமாற நாயனர் திருநாளில் ஏழைகட்குச் சோறிடுதல் இயற்பகை நாயனர் திருநாளில் திருமணம் செய்துவைத்தல், தண்டியடிகள் நாயனர் திருநாளில் திருக்குளம் அமைத்தல், அப்பர் திருநாளில் உழவாரப்பணி செய்தல் போன்ற பணிகளை மேற்

கொள்ளல் நலமாகும். இதுவே உண்மையாகப் பெரியவர்களின் புனித நாளைக் கொண்டாடுவதாகக் கருதப்படும்.

சமயக் கொள்கைகள் :

இங்கு நிகழும் சமயப்பயிற்சி வகுப்பில் பல்வேறு சமயக் கோட்பாடுகளை நீங்கள் தெரிந்துகொள்ள இருக்கிறீர்கள். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பர் உலகாயதர். உலகம் என்பது ஒன்று உண்டு அதனை இயக்கக் கடவுள் என்று ஒருவர் வேண்டுவது இல்லை என்பது உலகாயதர் கொள்கை. கடவுள் இருக்கிறார், மற்றவை யாவும் இல்லை. எல்லாம் கடவுளின் சாயல்களே என்பது சங்கரர்கொள்கை. இதை அத்வைதம் என்பர். கடவுள் உலகம் என்ற இவ்விரண்டோடு உயிர் என்ற ஒன்றையும் சேர்த்து பதி பசு, பாசம் என முப்பொருள் உண்மையைக் கூறுவது சைவ சித்தாந்தம். இக்கொள்கையைத் திருஞானசம்பந்தர் முதலிய சமயாசாரியர்கள் விளங்கக் கூறியுள்ளனர். முப்பொருள்களை பதி(கடவுள்) பசு(உயிர்) பாசம்(உலகம்) என முறைப்படுத்தி இலக்கணம் கூறி சைவ சித்தாந்தம் விளக்குகிறது. இவை மூன்றும் சைவத்தின் அடிப்படைப் பொருள்களாகும். வைணவர்களுக்கும் இம்முப்பொருள்களும் உடன்பாடே. சங்கரர்க்கு வேதம் உடன்பாடு. ஆகமங்களிலும் அவை கூறும் நெறிகளிலும் உடன்பாடு இல்லை. கணபதி, சிவன், சக்தி, திருமால், ஆதித்தன் முதலாய இவ்வைந்தையும் பூசிப்பது பஞ்சாயதன பூஜை என்பர் சங்கரர் நமது கோயில் வழிபாடு, கோயில் அமைப்பு முதலியன சங்கரர் கோட்பாடுகளில் இல்லை. ஆனால் அண்மையில் காசியில் இக்கோட்பாட்டினர் கோயில் ஒன்றை அமைத்துள்ளனர். உயிர்களுக்கு இரக்கம் காட்டும் ஜீவகாருண்யம் போன்ற கொள்கைகளில் சைவத்தோடு ஜைனம் பெரும்பாலும் ஒத்திருக்கின்றது. சைவத்திலிருந்து வைணவம் பிரிந்ததாகக் கருதப்படுகிறது.

அகச் சமயங்கள் :

சைவத்தில் விஷ்ணுவிற்குக் கோயிலிலும் ஆன்மார்த்த பூஜையிலும் இடம் உண்டு. வைணவத்தில் சிவமூர்த்திக்கு ஆன்மார்த்த பூஜையிலும், பரார்த்த பூஜையிலும் இடம் இல்லை. இன்றும் வைஷ்ணவம் சைவத்திற்குப் புறம்பல்ல அறியாமையால் சைவருள் சிலரும் விஷ்ணு வழிபாட்டை விலக்கினர்; வைஷ்ணவம் தனியாகப்பிரிந்தது. அகச்சமயங்களுள் இவ்வாது சாக்தம், காணபத்தியம், கௌமாரம் முதலிய மதங்களைப் பிரிக்க முயன்றனர். முயற்சிகள் வெற்றிபெறவில்லை. முருக வழிபாடு தனியாகப் பிரியும் நிலையில்தான் கச்சியப்பர், கந்த புராணம் பாடி "சிவகுமாரனே முருகப்பெருமான்" என வலியுறுத்தி அம்முயற்சியைத் தடுத்தார்.

சைவ சித்தாந்தம் :

பதி பசு பாசம் என்ற இம்மூன்று பொருள்களும் ஒன்றால் ஒன்று தோற்றுவிக்கப்படாததாய்-தோற்றம் ஈறு இல்லாததாய்-அநாதியாய் உள்ளவை. இவை தகுதியாலும் தன்மையாலும் தரத்தாலும் வேறுபாடு உடையன. இம் முப்பொருள்களின் இயல்பினையும், இவற்றுக்கிடையே உள்ள தொடர்புகளையும் சைவ சித்தாந்தம் நுட்பமாகவும் - தெளிவாகவும் விளக்கி யுள்ளது

எண்குணங்கள் :

பதியாகிய கடவுள் குறைவிலா நிறைவினனாக விளங்குகின்றான். உயிர்கள் எண்ணற்றன. கடவுள் ஒருவனே. பரிபூரணனாகத் திகழும் கடவுள் எட்டுக் குணங்களை உடையவன். தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பன இறைவனது எண் குணங்கள். இறைவனது எண் குணங்களை அவனைச் சார்ந்து வழிபடுவதன் மூலம் நாமும் பெறலாம். இதனை உலகியல் வாழ்வியலால் நன்கு உணரலாம்.

வெவ்வேறு குணங்களையுடைய ஆணும் பெண்ணும் திருமணத்தின் பின்னர் இணைந்து வாழ்ந்துவரும்போது, சில ஆண்டுகளில் ஒருவர் குணம், மற்றவர்பால் படிவதை உலகியலில் காண்கின்றோம். இறைவனை வழிபடுவதால், அவனது உயர் குணங்கள் உயிர்களுக்கும் வாய்க்கும் என்பதனை இதனால் உணரலாம். பெற்றோர்களின் குணமும் செயலும் பிள்ளைகட்கு வாய்ப்பதும் இக்கருத்தை வலியுறுத்தும்.

ஆசிரியரிடம், மாணவன் சென்று வணங்கிநின்று பயில்வதால், மாணவன் தன் அறியாமையை நீக்கிக்கொண்டு தான் மேல்நிலை அடைகின்றானே தவிர அதனால் ஆசிரியருக்கு பயன் ஏதும் இல்லை அதுபோல இறைவனை வழிபடுவதால் உயிர்களே உய்தி பெறுகின்றன. இதனைத் திருக்களிற்றுப்படியார் என்னும் சித்தாந்த முதற்படி நூல்

“ தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான் ”

என விளக்குகிறது. எனவே, கருணையாளனாகிய பெருமானை வழிபட்டால் இறைவனது தூயதன்மைகள் உயிர்கட்குக் கைவரும். உயிர் சார்ந்ததன் வண்ணமாவது என்பது ஆன்றோர் கொள்கை. எண்குணம் உடையவனாகிய இறைவனைப்

பலகாலும் வழிபட்டால் உயிரும் மெல்ல மெல்ல இறைவனது குணங்களைப் பெற முடியும்.

பதி இயல்பு :

பெருங்கருணையாளனாகிய இறைவன் உயிர்கள் கடைத்தேற வேண்டும்; மலத்திலிருந்து விடுபடவேண்டும் என்ற பெருங் கருணை காரணமாகவே உயிர்களைத் தனு கரண புவன போகங் களில் செலுத்துகின்றான். உயிர்கள் கருணையாளனாகிய இறை வனை வழிபட்டு உய்திபெறுதல் வேண்டும். உயிர்களைப்பற்றி யிருக்கின்ற அழுக்கு நீங்குகின்றவரை மீண்டும் மீண்டும் இறைவன் பிறவியை வழங்குகின்றான். இறைவனை உயிர்கள் வழிபடுவதால், உயிர்கள் உய்திபெறுகின்றனவே அல்லாது நம் வழிபாட்டால் இறைவனுக்கு ஆவது ஒன்றும் இல்லை. இதனை மணிவாசகப் பெருந்தகை,

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாந்தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே"

என்ற திருப்பாடலால் இனிதே விளக்கியருளுகிறார்.

வாழ்வில் இன்பத் துன்பங்கள் மாறி மாறி வருகின்றன. இன்பம் மட்டுமே உயிர்களுக்கு வழங்கப்படுமானால் உயிர்கள் கடைத்தேற முடியாது. இன்பத்தில் அறிவு பெரும்பகுதி வேலை செய்வதில்லை. துன்பமே அறிவு விளக்கத்திற்கும், அனுபவத் திற்கும் துணையாகும்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

என்ற திருக்குறள் இதனை வலியுறுத்துகின்றது.

பித்தன் என்பதன் பொருள் :

இறைவனது பெருங்கருணைத் திறத்தைச் சுந்தரர் அனுப வித்த இன்பத் துன்ப நிகழ்ச்சியின் மூலம் நாம் உணர்கிறோம். "பித்தா" என்று தொடங்கியவர் இறைவன் கருணையை உணர்ந்து "அருளாளா" என விளிக்கிறார். பித்தன் என்ற சொல் அறிவு திரிந்தவன் என்ற பொருளில் இங்கே வழங்க வில்லை. பித்தன் என்பதற்குப் பேரருளாளன் என்ற பொருளே கொள்ளப்படுகிறது. சுந்தரர், பித்தா என்றதன் பின்னர் அருளாளா என்றழைப்பதைக் காணலாம் இதனைப் 'பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்ற பழமொழி விளக்கிக் காட்டும்.

உயிர்கள் உணர்த்த உணர்வன :

தானே உணரும் தன்மை இல்லாததாய் அறிவித்தால் அறியும் தன்மையுடையதாயிருப்பது உயிர். பசுவாகிய உயிர்கள் எண்ணற்றன. இயல்பாகவே மலம் என்னும் அழுக்கில் ஆட்பட்டு உயிர்கள் உழல்கின்றன. உயிர்கள் தானே உணரும் ஆற்றல் உடையன அல்ல. அறிவித்தால் அறியும் பொருளாகிய உயிர், தான் உய்திபெறுவதற்கு உரியதாயிருப்பதால் இறைவனை வழிபட்டு உய்திபெறத் தகுதியுடையதாகின்றது. அறிவித்தால் அறியும் உயிரும், தானே கருவி ஏதுமின்றி அறியும் கடவுளும் தன்மையால் வேறுபாடு உடையன. உயிர்களின் இத்தன்மையை அப்பர் பெருமான்,

> "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
> அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
> ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
> உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
> பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
> பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
> காட்டுவித்தால் ஆரொருவர் காணு தாரே
> காண் பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே"

என்ற திருப்பாடலாலும், நம் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர்,

> "உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
> கணத்தும் உணரும் வகைகாணேன் உணர்த்தியென்னுட்
> பூண்டமல மாயைகன்மம் போக்கிச் சிவானந்தத்
> தாண்டருள்வை சொக்கநா தா.

என்ற சொக்கநாத வெண்பாப் பாடலாலும் விளக்கியருளினர்கள். தாயுமான அடிகளாரும், இறைவன் இயக்காது எதுவும் இயங்கா என்பதனை 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று குறித்தருளுதலையும் இங்கே நினைத்தல் வேண்டும்.

பாசத்தின் இயல்பு :

இத்தகு உயிரைப்பற்றிநிற்கும் பாசம் என்பது மலம்-அழுக்கு என்று கூறப்படும். இதனை, ஆணவம், மாயை கன்மம் என மூன்றாகப் பகுப்பர். ஆணவம் என்பது இருள். உயிர்களை-பொருள்களை மறைத்து நிற்பது; தன்னையோ பொருள்களையோ காட்டாத பேரிருளாகும். மாயாமலம் என்பது உயிரை விளக்கம் செய்யும், மற்றதற்குத் துணை நிற்பது. தனு-(உடல்) கரணம் - (மனம், புத்தி, சித்தம்-அகங்காரம் என்னும் உட்கருவிகள்) , புவனம்-(உலகம்), போகம் (இன்பத் துன்பங்களாகிய அனுபவம்) இவற்றை உயிர்கள் பெற்று உய்வதற்கு மாயாமலம் உதவுகிறது கன்மம் என்பது உயிர் உடலோடு கூடி, செய்யப்படுகின்ற செயல்முறைகளை குறிக்கும்.

வேதச் சிறப்பு :

வேதம் முதலிய பலவற்றைப் பற்றிய கருத்துக்களை நீங்கள் இங்கே பயில இருக்கிறீர்கள். வேதம் எல்லாக் கருத்துக்களையும் உடையது. ஓர் பேராறு போன்றது. சைவம் துறை போன்றது. இன்னின்னர் இன்னின்ன கருமங்களைச் செய்ய வேண்டும் எனக் கட்டளையிடுகிறது வேதம். நித்திய கரும அனுஷ்டானங்களை அது வலியுறுத்துகிறது. எல்லாக்கொள்கைகளும் வேதத்தில் உண்டு. வேதத்தின் சாரமாகத் திகழ்வன ஆகமங்கள். பொதுவகைத் தருமங்களை வேதம் கூறுகிறது. சிறப்புத் தருமங்களை ஆகமங்கள் விளக்குகின்றன. வேதம்போல குறள் பொது அறங்களைக் கூறுகிறது. ஆகமம்போலத் திருமந்திரம் சிறப்பறங்களைச் சுட்டுகிறது

புராணங்கள் இவற்றையேமேற்கோளும்உதாரணமும்காட்டி விளக்குகின்றன. சூதமுனிவர் முதலியோர் புராணத்தின் வாயிலாக வேதத்தின் உட்பொருளை விளக்கினர். அரசகட்டளை போன்றது வேதம் என்றும், நண்பரின் அறிவுரை போன்றது புராண - இதிகாசங்கள் என்றும், மனைவியின் இன்மொழி போன்றது காவியங்கள் என்றும் இவற்றின் விளக்கும் தன்மையினைச் சான்றோர் விளக்கியுள்ளனர்.

வேதம் கர்மகாண்டம், ஞானகாண்டம் என இரண்டாகத் திகழ்கிறது. செயற்பாட்டைக் கர்மகாண்டமும், அதனால் ஏற்படும் விளக்கத்தை ஞானகாண்டமும் கூறுகிறது.

ஆகமச் சிறப்பு :

சிவாகமங்கள் இருபத்தெட்டு. கோயில் அமைப்பு, கோயில் வழிபாட்டுமுறை, சமயத் தத்துவ நுட்பங்கள் முதலியவற்றை ஆகமங்கள் விளக்குகின்றன. புராணங்கள் - பதினெட்டு. தோத்திரங்கள் திருமுறைபன்னிரண்டு சாத்திரங்கள் பதினான்கு. இவற்றை எல்லாம் முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கு இங்கே காலம் இல்லை. இவற்றின் எல்லைக் கோடுகளைப் பற்றி மட்டுமே நீங்கள் இப்பத்து நாட்களில் அறிந்துகொள்ள இருக்கிறீர்கள். சமய நுட்பங்களைத் தக்க ஆசாரியன் வழியாகக் கேட்டும் உலக நிகழ்ச்சிகளின் வாயிலாக அனுபவித்தும் அறிதல் வேண்டும்

சமய வாழ்வு :

இங்கே சமயப் பயிற்சி வகுப்பில் கற்பவற்றின் மூலம் சமயவாழ்வை நீங்கள் நுட்பந்தெரிந்து மேற்கொள்ளவும், மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டவர்களாகிறீர்கள். இந்தச் சமயப் பயிற்சி வகுப்பு செம்மையுற நடைபெற்றுப் பயனளிக்கச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

"அருமையில் எளிய அழகே போற்றி"*

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

புலவர். திரு. ந.ரா. முருகவேள் M. A., M. O L.,

முன்னுரை :

"அருமையில் எளிய அழகே போற்றி" என்பது, திருவாசகத்தில், 'போற்றித் திருஅகவல்' என்னும் பகுதியில் அமைந்துள்ள, ஒரு சிறந்த வரியாகும். திருவாசகம் என்னும் செந்தமிழ்த் தெய்வ மாமறையின் சிறப்பு, யாவரும் அறிந்ததொன்று. அதன் ஒவ்வொரு திருப்பாடலும், அப்பாடலின்கண் வரும் அழகிய சொற்கள் சொற்றொடர்களும், எத்துணையோ உயர்ந்த பல பொருள் நுட்பங்களைப் பொதிந்து கொண்டு திகழ்பவை என்பதும் அனைவருக்கும் உடன்பாடு. அம்முறையில், இவ்வரியும் பல சிறந்த பொருள் நுட்பங்களைப் பொதிந்துகொண்டு உணர்த்தும் முறையில் அமைந்து திகழ்கின்றது.

கடவுள் இலக்கணம் :

இவ்வரியைக் கடவுள் இலக்கணம் கூறும் ஒரு சிறந்த இனிய நூற்பா என்றே கூறலாம். கடவுளின் எல்லையற்ற பற்பல நல்லியல்புகளை எல்லாம், இவ்வரியானது ஒருங்கினிது தொகுத்துச் சுருக்கிச் செவ்விதின் உணர்த்தவல்லதாக விளங்குகின்றது. அன்பர் அல்லாதவர்களுக்கு அருமை உடையவராக, உணர முடியாத நிலையில் கடவுள் விளங்குகின்றார். அன்பர்களுக்கோ அவர்கள் விரும்பும் முறைகளிலெல்லாம் எளிவந்து இன்னருள் புரிகின்றார். அத்தகைய அவர்தம் இயலும் செயலும் அழகு மிக்கோங்கிப் பிறங்குகின்றன. கடவுளிலக்கணத்தின் இவ்வுண்மையினையே, திருவாசகத்தின் சிறந்த இவ்வரியானது பொதுவாக உணர்த்துகின்றது. எனினும், தொட்டனைத்தூறும் மணற்கேணி போல, இவ்வரியினை உன்னிஉன்னி உணருந்தோறும் பல சிறந்த அரும்பெரும் பொருள்கள், இவ்வரியின் அடிப்படையில் நமக்குப் புலனாகின்றன.

---

* சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் திருவாசக வகுப்பில் நிகழ்த்திய கருத்து விளக்கங்களைத் தொகுத்து எழுதியது.

மூவகை நிலைகள் :

(1) கடவுள் தன்னியல்பில் எல்லாவற்றிற்கும் எல்லோருக்கும் அப்பாற்பட்டு மிக மேலானவராக விளங்குகின்றார். இதனைக் கடந்தநிலை (Transcendence) என்பர். அவரே எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களின் உள்ளத்திலும் பிரிவற இயைந்து நின்று திகழ்கின்றார். இதனைக் கலந்தநிலை அல்லது அந்தர்யாமித்துவம் (Immanenee) என்பர். கடவுள், தம்மை வழிபடும் அன்பர்களுக்கு அவர்கள் விரும்பும் திருவுருவங்களில் தோன்றிக் காட்சி தந்து, அவர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு மகிழ்வித்து அருள்புரிகின்றார். இதனைக் கவர்ந்தநிலை (Appearance) எனலாம். 'என் உள்ளம் கவர் கள்வன்' எனவரும் திருஞானசம்பந்தர் திருமொழியும் இங்கு நினைவு கூரத் தகுந்தது. இங்ஙனம் கடவுளுக்குரிய கடந்தநிலை, கலந்தநிலை, கவர்ந்தநிலை என்னும் மூன்றுவகை நிலைகளையே, முறையே அருமை எளிமை அழகு என்னும் சொற்களால், மாணிக்கவாசகர் குறிப்பிட்டு அருளினர் போலும் எனக் கருத இடமுண்டு.

முப்பெரும் பண்புகள் :

(2) மேலை நாட்டுச் சிந்தனையாளர்கள் அனைவரும் மிக விதந்தெடுத்துப் போற்றி வியந்து புகழ்ந்து, உண்மை (Truth), நன்மை (Goodness), அழகு (Beauty) என்னும் மூன்றையும் எல்லாவற்றிற்கும் மேலான மிகச் சிறந்த பண்புநலங்களாகக் குறிப்பிடுவர் (1). உலகத்தில் எல்லாவற்றிற்கும் மேலானதாய்ச் சிறந்து திகழ்வது உண்மையே. உண்மை எதுவோ அதுவே நன்மையாகும். நன்மை எங்கே எதில் உள்ளதோ, அங்கே அதில் அழகும் இருக்கும். உண்மையும், நன்மையும், அழகும் ஆகிய இவை மூன்றும், தம்முள் ஒன்றினொன்று பிரிவற இயைந்து நிற்பனவாகும். இம்மூன்றும் உலக மக்கள் அனைவராலும் விரும்பிப் போற்றப்படுவன. அவை அவர்களுக்குப் பெரிதும் இன்றியமையாதனவாய் எல்லையில்லா நலங்களை விளைவிப்பன. மேலை நாட்டு நூல்கள் சிறப்புற வியந்து போற்றும் இம்மூன்றையும்,

---

(1) "Among all the meaningful values of the Superorgonic world there is the supreme integral value - the veritable summum bonum ...... If is the indivisible unity of Truth, Goodness and Beauty ...... "

— Pitrion A. Sorokin,
This is My Philosophy. (Asymposium)
p. 184.

நம்நாட்டு நூல்களும் சத்தியம் சிவம் சுந்தரம் (2) எனக் குறிப்பிட்டுப் போற்று நிற்கும் இம்மூன்றின்கண் அடங்காத உயர்ந்த பண்பு நலங்கள் எதுவுமேயில்லை. எனவே இவற்றையே கடவுள் இலக்கணம் குறிக்கும் சிறந்த மூன்று பண்புகளாக நாம் கொள்ளலாம். இம் மூன்றினையுமே அருமை எளிமை அழகு எனும் மூன்றும் குறித்து நிற்பனவாக நாம் கொள்ளுதல் கூடும். உண்மை நமக்கு ஒருவகையில் அருமையானதே, அது நமக்கு நன்மை பயக்கும் பொழுது அருமை தவிர்ந்து எளிமையாகி விடுகின்றது. அந்நிலையில் அதன் அழகை நாம் உளமார உணர்ந்து வியந்து போற்றுகின்றோம்.

சச்சிதானந்தம் :

(3) கடவுட் பெரும் பொருளின் இயல்பினைக் கவிஞர்களும் ஞானிகளும் பலவகையாகச் சிறப்பித்து விதந்து வியந்து, எத்துணையோ வெவ்வேறு பலவகைகளில் போற்றிப் பாடுவர். ஆயினும் அவர்கள் அனைவரும் கடவுட் பெரும் பொருள் சத்து - சித்து - ஆனந்தம் என்னும் மூன்றன் வடிவாகத் திகழ்கின்றது என்பதனை ஒருமுகமாக ஒத்து உடன்பட்டுப் புகழ்ந்துரைப்பர்,

“நம் இந்திய நாட்டுப் பழம்பெரும் சான்றோர்களும், தத்துவ ஞானிகளும் தவநெறிச் செல்வர்களும் உலகையும் கடவுளையும் பற்றி ஆராய்ந்து அறிந்து உணர்ந்திருந்த கருத்துக்கள் அனைத்தையும், சச்சிதானந்தம் என்னும் சுருக்கம் மிக்க சொற்றொடர் ஒன்றே, தெளிவுற விளக்கி நிற்கின்றது ! (3)

---

(2) The objective aspects of the Pure Ego, ate the True (Satyam) the Beautiful (Priyam), the good (Hitam) ; or Santam, Sundaram, Sivam, the Restful, the Lovely, the Auspicious. ”

— Dr. Bhagavan Das,
Atma - Vidya. The Science of the Self.

(3) “ The view of this world which India has taken is summed up in one compound Sanskrit word Satchidanandam. The meaning is that Reality, which is essentially one, has three phases.

The first is Sat ; it is the simple fact that things are the fact which relates us to all things through the relationship of common existence.

(தொடரும்)

"கடுமையான முடிவுகளைச் செய்ய வேண்டிய தருணம் வந்துவிட்டது"

"மக்களில் சில பிரிவினரை விவசாயிகள், தொழிலாளர்கள், தொழில் செய்பவர்கள் முதலியோரை, சந்தோஷப் படுத்த நாம் முயன்றோம். அதன் பலனாகத் தொல்லையில் மாட்டிக்கொண்டிருக்கிறோம். எனவே நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டு வந்த கடுமையான முடிவுகளைக் காங்கிரஸ் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது.

அந்த முடிவுகளால் சர்க்கார்மீது மக்களின் அபிமானம் பாதிக்கப்படலாம். ஆயினும், நாட்டின் நலனுக்கு அந்த முடிவுகள் அவசியம்".

இந்தியப் பிரதமர்.

"இந்த எண்ணம் மாறவேண்டும்"

தானிய உற்பத்தியாளர்கள் விளைச்சலைத் தங்கள் வசமே வைத்துக் கொள்வதற்கும், வர்த்தகர்கள் சரக்குகளைப் பதுக்கிவைப்பதற்கும், மக்கள் பீதியுடன் சரக்குகளை வாங்க முற்படுவதற்கும், நிர்வாகி மெத்தனமாகிவிடுவதற்கும் "ஒன்றும் நடக்காது, எதுவும் செய்ய முடியாது" என்ற மனப்பான்மையே காரணம். எனவே இந்த எண்ணத்தை நீக்கவேண்டும்.

இந்தியப் பிரதமர்.

நன்றி. —தினமணி 12—7—74.

பார்வையாளர்கள் குறிப்பு நகல்

தருமையாதீனம

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

நானும் என் குடும்பத்தினரும் இக்கோயிலுக்குவந்து எல்லா தெய்வ பிராகாரங்களையும் வலம்வந்து வழிபட்டோம். கோயில் மிகுந்த சுத்தமாக இருப்பது மனதுக்கு ரொம்பவும் ரம்யமாக இருந்தது. பக்திப் பரவசமாகவும் இருந்தது. இங்குள்ளவர்கள் மிகவும் மரியாதையுடன் எங்களை வரவேற்று வழியனுப்பியது மிகவும் நன்றாக இருந்தது.

(S-d) திருமதி ராதா சேஷாத்திரி,
Special Correspondent, Daily Thanthi,
New Delhi.

17—4—74.

ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் தரிசனத்திற்காக
ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் ஞானபீடம் அமர்ந்தபின்
மதுரைக்கு முதன் முதலாக எழுந்தருளியபோது



சிவதர்ம பாஸ்கர சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர் அவர்களும்
அறங்காவலர் குழுத்தலைவர்
திரு. நாராயணன் செட்டியார் அவர்களும்,
ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குப் பொன்னடை போர்த்தி
வரவேற்கும் காட்சி



மதுரை நகரப் பெருமக்கள் அளித்த வரவேற்பின் போது
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி
வழங்கல்

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில் (10—6—74)

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் பொன்னாடை போர்த்தி ஆதீனப் புலவர் பட்டம் வழங்கப்பெற்றவர்கள்

நிற்போர் :- இடமிருந்து வலம் :

திரு. வி. சபேசன்; திரு. க. வெள்ளைவாரணனார், திரு. கு. சுந்தரமூர்த்தி, திரு. ந.ரா. முருகவேள், திரு. பி. சுவாமிநாதன் திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. சொ. சிங்காரவேலன்.

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூசை விழாவில்
11—6—'74 பட்டணப் பிரவேசத்தன்று
ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூஜை மடத்தில்



இருபத்தாறுவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி
கனம். திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கட்குப்
பொன்னாடை போர்த்தியும்
சீகாழி, திரு. எஸ். கோவிந்தராசன் அவர்கட்கு,
" தருமையாதீன இசைப்புலவர் " பட்டம் வழங்கிப்
பொன்னாடை போர்த்தியும் ஆசி அருளல்

சிவஞானசித்தியார் தெளிபொருள்விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

(மலர் 33. இதழ் 7. பக்கம் 345 இன் தொடர்ச்சி)

30. மதிநிலா நுதலா ரோடு மணிநிலா முன்றில் ஏறி
முதிர்நிலா எறிப்பச் செவ்வாய் இளநிலா முகிழ்ப்ப [மொய்த்த
கதிர்நிலா வடங்கொள் கொங்கைக் கண்கள்மார் [பகலம் மூழ்கப்
புதுநிலா வியநன் போகம் விடுவர்புன் சமயத் தோரே.

இதன் தெளிபொருள்

யாவராலும் மதிக்கப்படுகின்ற, பிறைபோலும் நெற்றியை யுடைய மகளிரோடு மேன்மாடமாகிய அழகிய நிலா முற்றத்தில் ஏறியிருந்து, நிறை நிலா, தனது ஒளியை மிகப் பரப்ப, அதன் ஊடே மகளிரது சிவந்த வாயின்கண் புன்முறுவலாகிய இள நிலாச் சிறிதே அரும்ப, நெருங்கிய, வெள்ளொளி விளங்கும் முத்து வடங்களைக் கொண்ட அவரது கொங்கையின் கண்கள் தமது மார்பினை உருவிச் செல்வதுபோல அழுந்தப் புல்லுந் தோறும் புல்லுந்தோறும் புதுமையாக விளைகின்ற சிறந்த இன்பத்தினை நுகர்ந்து வாழாமல், சிற்றறிவுடைய சமயிகள், இவ்வின்பத்தை, 'சிற்றின்பம்' என இகழ்ந்து ஒதுக்கிப்போவார்.

விளக்கம்

'இஃது அவர் இயல்பிருந்தவாறு' என்பது குறிப்பெச்சகம், 'புதுமை' என்பதன் ஈறு தொகுத்தலாயிற்று. (19)

31. ஊடுவ துணர்வ துற்ற கலவிமங் கையரை உள்கி
வாடுவ தடியில் வீழ்ந்து வருந்துவ தருந்த வம்;பின்
கூடுவ துணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை [யேயாய்
நீடுவ தின்ப முத்தி ; இத்தில்நின் றூர்கள் முத்தர்.

இதன் தெளிபொருள்

கலவிக்குப் பொருந்தின மகளிருள் ஊடலை அளவாகச் செய்தொழியாது நீட்டிக்கின்றவரது கொடுமையை நினைந்து மெலிதலும், அவ்வாறன்றி ஊடலை அளவாகச் செய்து தணிகின்றவரது அன்பினை நினைந்து அவர் ஊடல் தணியுமாறு அவரது பாதங்களில் வீழ்ந்து வருந்திக் குறையிரத்தலுமே அரிய தவங்களாம். பின் அத்தவத்தின் பயனாக அவரோடு கூடிப்பெறும் இன்பமே முத்தியின்பமாம். ஏனை எல்லாக் குணங்களும் காமம் ஒன்றேயாய்விடத் தம்மையும் மறந்து அவ்வின்பத்தில் நீட மூழ்குதலே முத்தியின்பத்தில் திளைத்தலாம். இந்நிலையில் பெயராது நிற்பவரே முத்தராவார்.

விளக்கம்

'ஊடுவது உற்ற மங்கையரை உள்கி, உணர்வது உற்ற மங்கையரை உள்கி' என இரு தொடராகக் கூறி, அவற்றிற்கு "வாடுவது, வருந்துவது" என்பவற்றையும், "கூடுவது, நீடுவது" என்பவற்றிற்கு, "இன்பம், முத்தி" என்பவற்றையும் நிரனிறையாக இயைத்துக்கொள்க. "ஊடுவது" முதலிய பலவும் தொழிற்பெயர்கள். "மங்கையர்" என்பது, அவரது பண்பைக் குறித்த ஆகுபெயர், (20)

இனி, அவர் பிற மதத்தவர்க்கு அறிவு கொளுத்துமாறு கூறுகின்றார்.

32. வீட்டினை உளதென் றேடி மெலிவதிங் கென்னை? வீடு
காட்டினோர் கண்டோர் கேட்டோர் கரிஅவை
[உண்டேல் காட்டீர்!
நாட்டினில் அரசன் ஆணைக் கிசையவே நடந்து நாளும்
ஈட்டிய பொருள்கொண் டிங்கே இன்பத்துள் இசைந்தி
[டீரே.

இதன் தெளிபொருள்

'உடம்பை விட்டபின் உயிர் தனியே நின்று ஓர் இன்பத்தைப் பெறும்' என்பதற்குச் சான்றாக, அவ்வின்பத்தினை, 'இது' என்று பிறர்க்குக் காட்டினோரும், அவர் காட்டியபடியே அதனைக் கண்டோரும், 'அஃது இவ்வாறிருந்தது' என்று நுகர்ந்தோர் சொல்லக் கேட்டோரும் எங்கேனும் இருப்பின் காட்டுங்கள். அது மாட்டாத பொழுது, அதனை உண்டென்று கொண்டு

அலேந்து மெலிதல் ஏனே! நும் கொள்கை இவ்வாறு புரை படுதலால் அதனை விடுத்து, யாம் சொல்கின்றபடி, நும் நாட்டு அரசன் வகுக்கின்ற ஆணைக்கு உட்பட்டு நாள்தோறும் முயன்று பொருளை ஈட்டி, அப்பொருளால் இவ்வுலகத்திலேயே இன்பத் திற் பொருந்தி வாழுங்கள்.

விளக்கம்

"வீடு" என்பது முதலாக இரண்டாம் அடியை முதற்கண் கூட்டி உரைக்க. வீடு - விடுதல். அஃது இங்கு உலகாயத மதத்தின்படி உடம்பு விடுதலேயே குறித்துப் பின் ஆகுபெயராய் அந்நிலையில் பெறும் இன்பத்தைக் குறித்தது. கரி - சான்று காட்டினேர் முதலிய மூவரும் வேறுவேறு வகையால் சான்றாதற் பாலர் ஆகலின், "கரி அவை" எனப் பன்மையாக ஓதினர். அவை பகுதிப்பொருள் விகுதி. 'கரிஅவையாக' என ஆக்கம் வருவித்து உரைக்க. உலகாயதத்தையும் ஒருமதமாகக்கொண்டு இங்கு ஆராய்தல், இறுதிக்கண் கூறிய "அரசன் ஆணைக்கு இசையவே நடந்து" என்பதொரு நன்னெறியை அதுபற்றிநிற்றல் பற்றியேயாம். ஆகவே, அஃதொன்றையேனும் அம்மதத்தினர் உண்மையாகக் கடைப்பிடித்து ஒழுகுவராயின், பின் மேல் நிலையை அடைவர் என்க. 'அரசன் ஆணை இறைவன் ஆணை வழியே உளதாவது' என்பதும், 'அதனல் அதற்கு அடங்கி யொழுகுதல் நன்மக்கள் கடன்' என்பதுமே ஆத்திக மதங் களின் கொள்கையாம். 'இங்கே' என்னும் ஏகாரம் பிரிநிலை.

இத்துணையும் உலகாயத மதம் அவர் கூறுமாற்றனே வகுத்துக் கூறப்பட்டது.

(தொடரும்)

பார்வையாளர்கள் குறிப்பு நகல்

தருமையாதீனம்

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

இன்று ஸ்ரீ சட்டைநாதசுவாமி ஆலயத்தைக் குடும்பத்துடன் தரிசனம் செய்யும் பாக்கியம் கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சியடை கிறேன். தரிசனம் செய்துவைத்த கோயில் நிர்வாகத்தில் உள்ள வர்களுக்கும், அர்ச்சகர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தருமை ஆதீனத்திற்கும் என் நன்றியும் வணக்கமும் உரியன.

(S-d) எஸ். ஆறுமுகம்,

30—5—74. மாவட்ட வருவாய் அதிகாரி, தஞ்சை.

தமிழ் நாட்டில் சாக்தம்

நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்.,

1. வடிவமற்றதாய், குணமற்றதாயிருக்கும் பரதத்துவத்தோடு உறவாடுவது கடினம். ஆனால், அந்தப் பரம்பொருளுக்கு ஒரு வடிவத்தைக் கற்பித்து, அதைத் 'தாயே' என்று வணங்கி உறவாடத் தொடங்கிவிட்டால், நம்முடைய உணர்வோடு உலாவும் பொருளாகிவிடுகிறது அது. அப்பாலுக்கு அப்பாலாயிருக்கும் பொருள் இப்பாலுக்கு இப்பாலாக நெருங்கி நம்மை ஆட்கொள்ளுகிறது.

2. இறைவனைத் தாயாகக் கருதி ஊடாடுகிறவர்களுக்கு, சோதனைகளும் அதிகமாக ஏற்படுவதில்லை. தனயனுக்குத் தாயிடமிருக்கும் உறவு பாதுகாவல் நிறைந்த உறவு. அதில் ஆபத்துக்களும் அபாயங்களுமில்லை.

உச்சி தனை முகர்ந்தால்—கருவம், ஓங்கி வளருதடி!
மெச்சி யுனை ஊரார்—புகழ்ந்தால், மேனி சிலிர்க்குதடி

என்று தகப்பன் சொல்ல மாட்டான். தாய்தான் சொல்லுவாள். அவ்வளவு கருணை நிறைந்தது தாயுள்ளம். நாம் என்ன குற்றம் செய்தாலும் அவள் மன்னிக்கக் காத்திருக்கிறாள். நாம் உதைத்தாலும், உதைத்த காலுக்கு ஒரு தோடா போட்டு மகிழ்பவள் தாய். சகிப்புத் தன்மையும் எல்லையற்ற அன்பும் தாய்க்கு இருக்கிறபடியால், அச்சமின்றி அவளோடு நாம் பழகலாம்.

3. இந்த உறவை இறைவனிடத்திலே இணைத்து, இறைவனைத் தாயாகக் கற்பனை செய்து அவளோடு நாம் ஊடாடும்போது, நம் உணர்வு பெருகுகிறது. நம் ஆணவம் மெல்ல மெல்லக் கரைகிறது; ஆனந்தம் மேலிடுகிறது.

4. இறைத் தத்துவத்துக்கு நாமமில்லை, உருவம் இல்லையென்று நம் முன்னோர்களுக்குத் தெரியும். ஆனால், நமது புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாத அந்தத் தத்துவத்தோடு நெருங்க வேண்டுமே. அதற்காக ஒரு தந்திரம் செய்தார்கள்

அப்பொருளுக்கு நாமத்தையும் உருவத்தையும் கற்பித்தார்கள். அதோடு நிற்கவில்லை. மனித வாழ்க்கையில் நாம் நேரடியாக அனுபவிக்கிற, தாய் - உறவை ஏணியாகக்கொண்டு எட்டிப் பிடிக்க முடியாத வஸ்துவை உணர்வினால் எட்டிப்பிடித்தார்கள். அவ்வாறு எட்டிப்பிடித்த பிறகு, கற்பனையும் பாவனையும் அவசிய மில்லாமல் போய்விடுகிறது; கற்பனையை உதறித் தள்ளிவிட்டு பரதத்துவத்தோடு ஒன்றிவிடலாம். திருமூலரைப்போல்,

"கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின்றேனே"

என்று ஒடுங்கிவிடலாம்.

5. ஆனால் இறைத் தத்துவத்தை உணரும் வரை கற்பனை யின் உதவி நமக்கு வேண்டியிருக்கிறது. அதை சக்தி தேவி யாகக் கற்பனை செய்து வழிபடும் சமயத்தையே சாக்தம் என்று சொல்லுகிறோம்.

சக்தி வழிபாடு எவ்வளவு சுகத்தைக் கொடுக்கிறது. எப்படி அபயம் அளிக்கிறது என்பதை ஒரு பாடல் காட்டுகிறது. யம பயத்திலிருந்து என்னைக் காப்பாற்று என்று கோமதித் தாயைப் பார்த்துக் கேட்கிறார் ஒரு பக்தர்.

"கேடா வருநமனைக் கிட்ட வராதே தூரப்
போடா எனஓட்டி, உந்தன் பொற்கமலத் தாள்நிழற்கீழ்
வாடா என அழைத்து வாழ்வித்தால், அம்ம, உனைக்
கூடா தென்னுர் தடுப்பார், கோமதித் தாய் ஈஸ்வரியே."

திருநெல்வேலி அழகிய சொக்கநாதப்பிள்ளை என்ற பக்தர் பாடிய பாடல் இது. இப்படியெல்லாம் தாயிடத்திலே துணிந்து வரங்கேட்கலாம். உரிமையோடு கேட்கலாம், இடித்துக் கேட் கலாம். கொடுக்கமாட்டேன் என்று சொல்லத் தாய்க்கு மனம் வராது.

6. தமிழகத்திலே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தாய்வழிபாடு பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. கி. பி. 80-இல், அதாவது, 19 நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட Periplus of the Erythrean Sea என்ற கிரேக்கப் பயண நூலி லும், கிறிஸ்து பிறந்து 75 ஆண்டுகள் வரை வாழ்ந்த Pliny என்ற கிரேக்க ஆசிரியருடைய சில நூலிலும் தமிழகத்தில் சக்தி வழிபாடு இருந்தது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

7. தொல்காப்பியத்திலும், சங்க காலத் தமிழ் இலக்கியத்திலும், தெய்வத் தாய்க்குக் கொற்றவை என்றும் ஐயை என்றும் நாமம் சூட்டியிருக்கிறார்கள். கொற்றவையின் கோலத்தைச் சிலப்பதிகார வேட்டுவவரியில் இளங்கோவடிகள் வருணிக்கிறார்.

" ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரிஉடுத்து
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க, மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய், நடுக்கின்றி யேநிற்பாய் "

காட்டெருமைத் தலைமேல் நின்றவள் மகிஷாசுர மர்த்தினி தான் என்பது அடுத்த பாட்டில் தெளிவாகிறது.

" வரிவளைக்கை வாள் ஏந்தி, மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்
அரி,அரன்,பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிர்அம் சோதி விளக்காகி யேநிற்பாய். "

இப்பாடலில் கொற்றவையை லக்ஷ்மியாகவும் பார்வதியாகவும் சரஸ்வதியாகவும் போற்றுகிறார் இளங்கோவடிகள். மரக்கால் மேல் நின்று வாட்கூத்து ஆடுகிறாள் கொற்றவை. அதைக் கண்டு அவுணர்கள் அழிந்துபடுகிறார்கள். வானோர்கள் மகிழ்கிறார்கள் என்றும் சிலப்பதிகார ஆசிரியர் கூறுகிறார்.

8. மணிமேகலையில் துர்க்கையைக் காடமர் செல்வி என்று கூறப்பட்டிருக்கிறது. அவளுடைய கோயில் முன்றிலில் பலி பீடங்களிருக்கின்றன; நெடுமரங்களுமிருக்கின்றன; தலைகள் மரக்கிளைகளினின்றும் தொங்கிக்கொண்டிருக்கின்றன, உலையாத உள்ளத்தோடு காளிக்குப் பலியாகத் தம் தலைகளைத் தாமே அரிந்து கொடுத்த வீரர்கள் தமிழ் நாட்டிலிருந்தார்கள் என்று மணிமேகலை சொல்லுகிறது.

சூரமும் வன்கண்மையும் நிறைந்த சாக்தர்கள் தமிழகத்திலிருந்தார்கள் என்பதைக் கலிங்கத்துப்பரணி உறுதிப்படுத்துகிறது. தேவிக்கு நரபலி கொடுத்து வழிபடும் காட்சியை ஒரு பாடல் விவரிக்கிறது.

" சொல்லரிய ஓமத்தீ வளர்ப்பராலோ,
தொழுதிருந்து பழஎலும்பு தொடரவாங்கி
வல்எரியின் மிசை எரிய இடுவராலோ,
வழிகுருதி நெய்ஆக வார்ப்ப ராலோ,

அடிக்கழுத்தின்நெடுஞ் சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவு மாலோ
குறைஉடலம் கும்பிட்டு நிற்கு மாலோ"

சக்திதேவியிடத்திலிருந்த பக்தி வெறியில் இப்படியெல்லாம் மக்கள் அலங்கோலத் தியாகங்கள் செய்திருக்கின்றார்கள்; ஆணவத்தைத் தியாகம் செய்வதற்குப்பதிலாகத் தலையையும் கையையும் அரிந்து தியாகம் செய்திருக்கிறார்கள். வெறுக்கத்தக்க இப்பழக்கங்களையெல்லாம் சினாச்சாரம் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள்; அதாவது, சீனாவிலிருந்து இறக்குமதியான பழக்கங்கள் என்று.

9. சாக்தத்திலேயிருந்த குரூரமான அம்சங்களையெல்லாம் களைந்துவிட்டு, அதிலுள்ள மெய்ப்பொருளை மாத்திரம் ஏற்றுக்கொண்டு, சைவத்தையும் சாக்தத்தையும் சமரசப்படுத்திவிட்டார்கள் தமிழ் நாட்டிலேயிருந்த ஞானிகள். சிவனை உமைபொரு பாகனுக்கி, அவனுக்கு அர்த்தநாரி வடிவத்தைக்கொடுத்து இந்தக் கொள்கையை மேலும் வலியுறுத்திவிட்டார்கள். தீயிலிருந்து எப்படிச் சூட்டைப் பிரிக்க முடியாதோ, அப்படியே சிவதத்துவத்தினின்றும் சக்தித் தத்துவத்தைப் பிரிக்க முடியாது என்று முடிவு கட்டினார்கள். இதையே திருமந்திரத்திலும்,

"அண்ணா லிருப்பது அவளக் கரத்துளே
பெண்ணாின் நல்லாளும் பிரான்அக் கரத்துளே
எண்ணி யிருவர் இசைந்தங் கிருந்திடம்
புண்ணியவாளர் பொருளறி வார்களே"

என்று சொல்லியிருக்கிறது.

இறைவன் அம்மையப்பனாகக் காட்சியளிக்கிறார் என்ற கருத்தை நாயன்மார்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்தக் கருத்தையொட்டியே கம்பனும் ஒரு அரிய கவி பாடியிருக்கிறார்.

"தாய்தன்னை யறியாத கன்றில்லை, தன்கன்றை
ஆயும் அறியும்; உலகின் தாய் ஆகி, ஐய,
நீ அறிதி எப்பொருளும்; அவை உன்னை நிலையறியா
மாயைஇது என்கொலோ! வாராதே வரவல்லாய்"

'உலகின் தாய்' என்று இறைத் தத்துவத்தை வருணித்துவிட்டு, "ஐயனே" என்று விளிக்கிறார். தாய்த் தத்துவமும் தகப்பன் தத்துவமும் பின்னிக் கிடந்த நிலையையே மேற்சொன்ன பாட்டில் கம்பர் சுட்டிக்காட்டுகிறார்.

ஒரு முஸ்லிம் சித்தர் எழுதிய ஞானரத்னக் குறவஞ்சியென்ற நூலிலே தாய் சம்மதிக்கவில்லையென்றால் தகப்பன் இந்தப் பிரபஞ்சத்தை உற்பத்தி செய்திருக்க முடியாது என்று சொல்லியிருக்கிறது.

"எப்படி யுலகத்தில் இப்படி உருவானோம்... சிங்கி... அது
அப்பன்தன் நட்புக்கு ஒப்பிய தாயாலே... சிங்கா"

இந்தக் கருத்தையே திருமூலரும்,

"ஒருவன் ஒருத்தி விளையாட லுற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைவிக்கும்"

என்று சொன்னார்.

10. சிவம் என்பது செயலற்ற தத்துவம் என்றும், மகா மாயையாகிய சக்தி தேவி சிவத்தைத் தொட்டவுடன் ஆணவ மாயை பிறக்கிறதென்றும், ஆணவத்திலிருந்து மனசு என்ற தத்துவம் உதயமாகி, மனசிலிருந்து ஆகாசம், ஆகாசத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து தீ. தீயிலிருந்து நீர். நீரிலிருந்து மண் — இவ்வாறாகப் பஞ்சபூதச் சேர்க்கையால் பிரபஞ்சமும் உயிர்களும் தோன்றுகின்றன என்றும், இந்தப் பரிணாம நெறியே (Evolution) சக்தியின் விளையாட்டு என்றும் சித்தர்கள் கருதுகிறார்கள். பிரளய காலத்தில், மண்ணை நீர் உண்ணுகிறது. நீரைத் தீ உண்ணுகிறது. தீ காற்றில் ஒடுங்குகிறது. காற்று ஆகாசத்திலும் ஆகாசம் மனசிலும், மனசு ஆணவ சக்தியிலும், ஆணவ சக்தி சிவத்திலும் ஒடுங்குகிறது. இதையே (Involution) அல்லது ஒடுக்கம் என்று கூறுகிறார்கள்.

ஊழிக் கூத்து என்ற பாடலில் சுப்பிரமணிய பாரதியார் பிரபஞ்ச ஒடுக்கத்தில் காளியின் கூத்து எவ்வாறு நடக்கிறதென்பதை உணர்ச்சியோடு பாடியிருக்கிறார்.

"வெடிபடு மண்டத் திடிபல தாளம் போட — வெறும்
வெளியில் இரத்தக் களியொடு பூதம் பாட — பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற் கூட — களித்
தாடும் காளீ! சாமுண்டி! கங்காளீ!

ஐந்துறு பூதம் சிந்திப் போயொன் றாகப் — பின்னர்
அதுவும்,சக்திக் கதியில் மூழ்கிப் போக — அங்கே
முந்துறும் ஒளியிற் சிந்தை நழுவும் வேகத் — தோடே
முடியா நடனம் புரிவாய். அடுதீ சொரிவாய்!

பாழாம் வெளியும் பதறிப் போய்மெய் குலையச் — சலனம்
பயிலும் சக்திக் குலமும் வழிகள் கலைய — அங்கே
ஊழாம் பேய்தான் "ஓஹோ ஹோ" என்றலைய — வெறித்
துறுமித் திரிவாய், செருவெங் கூத்தே புரிவாய்

சக்திப் பேய்தான் தலையொடு தலைகள் முட்டிச் — சட்டச்
சடசட சட்டென் றுடைபடு தாளங் கொட்டி — அங்கே
எத்திக் கினிலும் நின்விழி அனல்போய் எட்டித் — தானே
எரியும் கோலம் கண்டே சாகும் காலம்

காலத் தொடுநிர் மூலம் படுமூ வுலகும் — அங்கே
கடவுள் மோனத் தொளியே தனியாயிலகும் — சிவன்
கோலங் கண்டுன் கனல்செய் சினமும் விலகும் — கையைக்
கொஞ்சித் தொடுவாய் ஆனந்தக்கூத் திடுவாய்.

அன்னை! அன்னை! ஆடுங்கூத்தை
நாடச் செய்தாய் என்னை."

11. இவ்வாறு பஞ்சபூதங்கள், காலம், இடம், மனம், ஆணவம் என்ற தத்துவங்கள் எல்லாம் ஒடுங்கிய நிலையில், சிவன், சக்தி தேவியின் கர்ப்பப்பையிலே சொருசாக ஜாக்ர நித்ரை செய்துகொண்டிருக்கிறான்; இந்த நிலையில் சிவனுக்கும் தாயாகக் காட்சி கொடுக்கிறாள் சக்தி தேவி. பிறகு, மறுபடியும் பிரபஞ்சம் உற்பத்தியாகும்போது சிவனுக்குத் தாரமாக இருக்கிறாள் தேவி. பிரபஞ்சம்தோன்றி அதன்மூலம் கோடானு கோடி சக்திகள் இயங்கும்போது, தேவி சிவனுடைய மகளாகக் காட்சியளிக்கிறாள். இந்தக் கருத்தைத் திருமந்திரம் விளக்குகிறது.

"வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் நற்றாரமும் ஆமே."

பேரண்டத்தில் இவ்வாறு ஞான நாடகமாடிய பெண்பிள்ளை, சிற்றண்டத்திலும் பலவித நிலைகளிலிருந்து உயிர்களுக்கு உதவுகிறாள். கொங்கண நாயனார் வாலைக்கும்மியில் இதைத் தெளிவு படுத்தியிருக்கிறார்.

"மாதா வாய்வந்து அமுதம் தந்தாள் — மனை
யாட்டி யாய்வந்து சுகங்கொ டுத்தாள்
ஆதர வாகிய தங்கை யானாள் — நமக்
காகக் கொழுந்தியு மாமி யானாள்."

(தொடரும்)

சிவஞானப் பாலமுது*

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், செஞ்சொற்கொண்டல்,
டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச்.டி.

(மலர் 33. இதழ் 7. பக்கம் 353 - இன் தொடர்ச்சி)

கோயிலுக்குள் விரைந்தோடி வந்த போது
　　குழந்தையென அழுதோடி வந்த பிள்ளை
வாயினிக்கச் சிவஞான அமுதந் தன்னை
　　வள்ளமதில் எடுத்துண்டு பாரை யெல்லாம்
தாயினுஞ்சீர் அன்போடு நோக்கு கின்ற
　　தரமுயர்ந்த பெரும்பிள்ளை யாகிவிட்ட
ஆயிரஞ்சீர் தமிழ்ப்பாட்டில் அடங்கா தன்றோ ?
　　ஆயினுஞ்சீர்ப் பாவாரந் தொடுக்கின் றோம்நாம் !　(17)

தேவாரந் தொடுத்ததமிழ் முதல்வ னுக்குத்
　　தென்றமிழில், இதயத்தின் அன்பைக் கூட்டிப்
பாவாரந் தொடுக்கின்றோம்; அற்பு தத்தைப்
　　படிக்கின்ற போதெல்லாம் ஆர்வம் பொங்கி
நாவாரம் புனைகின்றோம்; அன்றோன் செய்த
　　'நற்றமிழைப்' பண்மலிந்த தேனாரத்தை
நாவாரப் புகழ்ந்தாலும் எல்லைக் குள்ளே
　　நடந்திடுமோ ? அத்தனையும் 'ஞானம்' அன்றோ? (18)

பொய்யான மெய்யினுக்குத் தந்தை தாயர்
　　போய்விட்டார்; உயிர்க்குயிராம் பெற்றோர் தம்மை
மெய்யாகக் கண்டுவிட்டார்; ஞானம் தன்னை
　　மிளிர்கின்ற செந்தமிழிற் பண்ணைக் கூட்டி
வையகத்தில் வழங்கிநின்றார்; தலங்கள் தோறும்
　　வருகின்றார்; தென்பாண்டி மதுரை சென்றார் !
பொய்யாத பாண்டிமா தேவி யார்தாம்
　　பூரிக்க அவர்மகனாய் அமணை வென்றார் !　(19)

பால்மணக்குந் திருவாயால் முதலிற் பாடும்
　　பதிகத்தில் ஞானமணம் விரிந்து நாறும் !
சேல்மணக்கும் நீர்க்கழனிக் காழி மேய
　　செல்வனார் 'உளங்கவர்ந்த கள்வர்' என்றே

நூல்மணக்க ஓதுகின்ற நுட்பந் தன்னை
நுவன்றிடவே ? தாமுரைக்கும் தமிழ்ப்பாட் டெல்லாம்
நூல்மணக்குந் திருமார்பர் செவியிற் செல்ல
நுணுக்கமுறத் தொடுத்துரைத்தல் நவிலு வேனோ ? (20)

அறியாமைச் செருக்கேறி மயங்கு கின்ற
அறிவிலிகள் தவறுபல செய்திட் டாலும்
அறியாமற் செய்ததனால் மன்னித் தங்கே
ஆரருளைப் பொழிகின்ற கருணை தன்னைப்
பிரியாமை பரம்பொருளின் பெருமை என்றே
பேசிடவே, இராவணற்கும் அருள் சுரந்த
குறியாகும் கருணையென எடுத்து ரைத்த
குறிப்பதனை எடுத்துரைக்கக் குளிரும் நெஞ்சம் ! (21)

உலகங்கள் அறியாத வரலா றென்றே
உரைத்திடவே, சிவஞானப் பாலை உண்ட
நலமதனை நாடெல்லாம் வியந்து போற்ற
நற்றமிழில் சொற்றமிழை மக்கள் கேட்டுப்
பலகலைகள் பாலரு வாயர் பாட்டிற்
படிந்தனவே ஆதலால், இலக்கியத்திற்
பலபுதிய வகைகண்டு மகிழ்ந்து நின்றார் !
பார்க்கில் 'இவை மூலஇலக் கியங்கள்' என்றார் ! (22)

புலனைந்தும் படுத்துகின்ற துயரந் தன்னிற்
போந்தறியா அருளாளர் ஒருவர் ஆவார் !
இலகுகின்ற பெண்ணினத்தைப் பழித்துப் பேசா
இயல்புடைய பெருங்கவிஞர் இவரே யன்றோ ?
புலந்தூயார்; பொறித்தூயார்; உலகின் துன்பப்
புயலறியாத் தூய்மையினார்; ஞானப் பாடல்
நலந்தூயார்; வையகத்தின் வாழ்விற் காக
நடந்தருளிப் பாலரு வாயர் ஆனார் ! (23)

தன்முனைப்பாம் பித்தேறித் தருக்கி நின்று
தாம்தொழுதல் செய்யாத வழுமனத்தார்,
சென்முனையிற் றலைக்காட்டான் சிவன்றான் என்ற
செய்தியினை மால்பிரமன் வரலாற் றாலே
நன்முறையிற் காட்டுகின்ற குறிப்புத் தன்னை
நலமுற நம்மடிகள் குறித்துக் காட்டும்
இன்முறையை எடுத்துரைக்க உணர்வு பொங்கி
இன்பூறும் திறமதனை இயம்பு கேனோ ! (24)

அடுக்காக நூல்பலவும் கற்று வைத்தும்
அதன்பயனு மெய்ப்பொருளை அறிந்தே உய்ந்து
வடுக்காக்கும் தொழிலில்லாச் சமணர் புத்தர்
வழிபடாத் திறமதனைப் பதிகந் தோறும்

கொடுக்கின்ற இயல்பதனை எடுத்துக் கூறக்
கோதற்ற ஞானநிலை உளத்தே தோன்றும்;
அடுக்கின்ற சிவஞான அமுதத்தாலே
அமைந்தமுதற் திருப்பதிகக் குறிப்பி தாமே. (25)

'அழுகின்ற பிள்ளையன்றோ பால்குடிக்கும்'
ஆம்; இந்தப் பழமொழிக்கே விளக்கம் ஆனார்!
தொழுகின்ற விளக்கானார்! திரு முறைக்குத்
தொடங்குகின்ற வித்தானார்! சமய வாழ்வில்
எழுகின்ற கதிரானார்; பாண்டி நாட்டில்
இருட்சமணர் தமையோட்டிச் சைவங் காத்தார்!
பொழிகின்ற தமிழ்பாடிப் பூத்து நிற்போம்;
பூக்கின்ற ஞானவொளி காத்து நிற்போம்! (26)

விஞ்ஞான உலகினிலே வாழு கின்ற
வேளையிலே, சிவஞானப் பாலை உண்டு
மெய்ஞ்ஞானம் பெறநினைத்தால் அன்னார் தந்த
மேலான பாவுண்டு; தோய்ந்து நின்றால்,
பொய்ஞ்ஞானம் புறம்போகும்; தூய்மை மேவும்;
பூரிக்கும் அகவாழ்வும், உள்ளம் நையும்!
அஞ்ஞானம் இருள்புலரும்; இதயத் துள்ளே
அறிவென்ற கதிர்உதயம் ஆகும் இன்றே! (27)

❋

இளைஞர்க்கிங் கொருவார்த்தை; இயம்பக் கேளீர்;
இருபதாம் நூற்றாண்டில் வாழுகின்றீர்!
கிளைஞரொடும் நலம்பெருகக் கேடொன் றின்றிக்
கிளர்ந்தின்ப ஒளிமேவி வளரவேண்டின்,
உளைச்சலெழும் புத்தகங்கள் படித்திடாமல்,
உள்ளத்தை உயர்த்துகின்ற நூலே கற்பீர்!
வளைத்தமுக்கும் பொய்யுடையார் வலையில் வீழ்ந்தே
வருந்தாதீர்! அருள்நூல்கள் நிழலே சேர்வீர்! (28)

'ஞானப்பால்' எனில்என்ன? வையம் வாழ
நயந்துரைத்த 'திருமொழிகள்' அஃதே அன்றோ?
ஏனப்பால் போகின்றீர்? எங்கள் செம்மல்,
ஏழிசையின் தமிழ்மாலை சூடி நிற்பீர்!
வானப்பால் வாழ்கின்ற வள்ளல் இங்கே
வாழ்விக்க வந்திடுவான்; தமிழைச் சொல்வீர்!
ஊனப்பால் உழலாதீர்! உவப்பால் இங்கே
உயர்ஞானப் பால்தமிழைப் பருகு வீரே! (29)

சிறுகதை :-

கோயில் மணி

"செந்தமிழ்ச்செல்வர்"

வித்துவான். திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,

(மலர் 33. இதழ் 7. பக்கம் 338 - இன் தொடர்ச்சி)

2

சாமிநாத குருக்கள் கோயிலுக்கு ஆராய்ச்சி மணி வாங்கிக் கட்டவேண்டும் என்று முயற்சி செய்கிற செய்தி ஊரே பரவியிருந்தது. முருக முதலியார், "இவர் ஒழுங்காகப் பூசை செய்வது தட்டுக்கெட்டுப் போகிறது! இதற்கு மணி வேறு" என்று அலுத்துக்கொண்டார். குருக்களோ தீட்சை வளர்க்கத் தொடங்கினர். "எதற்குத் தீட்சை?" என்றால், ஆராய்ச்சி மணி கட்டவேண்டும்; அது கட்டின பிறகுதான் தீட்சை எடுப்பேன்" என்று சொல்லிக் கோயிலில் ஓர் உண்டியலை வைத்து விட்டார். தினமும் ஒருவேளை சாப்பாடு என்ற நியமத்தை வேறு மேற்கொண்டார். ஊரில் உள்ளவர்கள் பல வெண்கலப் பாத்திரங்களைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். பலர் அவருடைய உண்மையான விரதத்துக்கு மனம் உருகிப் பணம் கொடுத்தார்கள்.

மணியின் விலை 8000 ரூபாய்; இரண்டரை அடி உயரம். அடித்தால் நாலு மைல் கேட்கும். எண்ணாயிரம் ரூபாய் மணிக்குக் கட்டிடம் முதலியன நாலாயிரம். எல்லாம் பதின் மூவாயிரத்துக்குத் திட்டம் போட்டாகிவிட்டது. பணம் வர வேண்டுமே!

தீட்சையோடு அவர் கொண்ட விரதங்களில் மற்றொன்று, அம்பிகைக்கு அர்ச்சனை செய்வதில் வரும் வரும்படியை மணிக்குப் போட்டுவிட வேண்டும் என்பது. அந்த ஆண்டு நவராத்திரி விழாவுக்கு உள்ளூர்ச் செட்டியாருடைய மைத்துனர் ஒருவர், பெரிய பணக்காரர் கோயம்புத்தூரிலிருந்து வந்திருந்தார், அவர் குருக்களுடைய விரதத்தை அறிந்து ஆயிர ரூபாய் கொடுத்தார். அதிலிருந்து குருக்களுக்கு அதிர்ஷ்டம்அடித்தது; வருகிறவர்கள் எல்லாம் நூறு, இருநூறு என்று கொடுக்க

லானுர்கள். "அயலூரான் அருமை அறிந்து ஆயிரம் கொடுக்கும்போது நாம் நூறுவது கொடுக்காமல் இருக்கலாமா? என்று கொடுத்தார்கள்.

முதலில் குருக்களுடைய விரதத்தைக் கேட்டுப் பரிகசித்தவர்கள் இப்போது வியப்படைந்தார்கள். அவர் விரதத்தை நிறைவேற்றத் தாங்களும் துணை செய்ய முன் வந்தார்கள். பக்கத்து ஊர்களுக்குப் போகும் போதெல்லாம் கோயிலில் பெரிய மணி கட்டும் முயற்சியை எடுத்துச் சொன்னுர்கள். எப்படியோ பதினுயிர ரூபாய் சேர்ந்து விட்டது. குருக்கள் நன்ருக விசாரித்துக் கும்பகோணத்தில் கோயில் மணி செய்து பழக்கப் பட்ட இடத்தில் மணி வார்க்க ஏற்பாடு செய்துவிட்டார்.

சில மாதங்களில் மணியும் வந்தது. மேற்கொண்டு பணமும் வந்து விட்டது. கோயில் மணியை வைக்க உயரமான கட்டிடம் கட்டவேண்டும். ஆளுக்கு ஒரு யோசனை சொன்னுர்கள், முருகமுதலியார் ஓரிடத்தைக் குறிப்பிட்டார். அவருக்கு இப்போது குருக்களிடம் ஓரளவு மதிப்பு உண்டாகியிருந்தது. ஆனுலும் சுப்பிரமணியசுவாமி கோயில் குருக்கள் சாயங்கால பூசை செய்வது போல இவரால் செய்யமுடியாது என்ற எண்ணத்தை மட்டும் விடவில்லை.

மணியை வைக்க எங்கே கட்டிடம் கட்டுவது என்பது நிச்சயமாகவில்லை. மணி வந்தாயிற்று, அதை அம்பிகையின் சந்நிதியில் வைத்துப் பூசை கூடச் செய்தாகிவிட்டது. கட்டிடம் கட்டும் விஷயத்தில் பெரிய மனிதர்கள் ஆளுக்கு ஓர் இடம்சொன்னுர்கள். முருகமுதலியார், "சிரமப்பட்டுப் பணம் சேர்த்தவர் எப்படிச் சொல்கிருரோ, அப்படிச் செய்யலாம்" என்று சொன்னுர். இதுவரைக்கும் குருக்கள் தம்முடைய கருத்தைச் சொல்லவே இல்லை.

"நீங்கள் எங்கே கட்டிடம் கட்டலாம் என்று எண்ணுகிறீர்கள்?" என்று கேட்டார் ஒரு பிரமுகர்.

"என் செயலால் பணம் வரவில்லை. ஈசுவரன் திருவருளால் தான் கிடைத்தது. அவன் திருவுள்ளம் எதுவோ அதன்படி தான் நடக்க வேண்டும்" என்ருர், குருக்கள்.

"அவன் திருவுள்ளத்தை எப்படித் தெரிந்து கொள்வது?" என்று கேள்வி கேட்டார் ஒருவர்.

"இவ்வளவு செய்தவன் அதையும் தெரிவிப்பான் என்றே நினைக்கிறேன். ஒரு வாரம் பொறுங்கள்" என்ருர் சாமிநாத குருக்கள்.

அன்று சாமிநாத குருக்கள் தர்மகர்த்தாக்களை யெல்லாம் வரச்சொன்னார். ஊரில் பெரிய மனிதர்களுக்கு ஆள்விட்டு அழைக்கச் சொன்னார். சுப்பிரமணியசுவாமி கோயில் பூசகராகிய முத்துசாமி குருக்களையும் வரும்படி சொல்லியனுப்பினார். எல்லோரும் வந்து சேர்ந்தார்கள்; குருக்கள் கண்களில் நீர் வரப் பேசலானார். "நாம் ஒன்று நினைக்கப் பரமசிவன் ஒன்று நினைத்திருக்கிறான். இந்தக் கோயிலில் மணியைக் கட்டவேண்டு மென்று எல்லோரும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். சிவபெருமான் வேறு வகையாக உத்தரவு பண்ணியிருக்கிறான்."

"என்ன, என்ன?" என்று பல குரல்கள் ஒருங்கே எழும்பின.

"ஆண்டவன் தனக்கு அந்த மணி வேண்டாம் என்றும் கலியுக தெய்வமாகிய தன் குமரன் திருக்கோயிலில் அதைக் கட்டவேண்டுமென்றும் என் கனவில் நேற்று வந்து கட்டளை யிட்டான். அவன் திருவுள்ளம் அப்படி இருக்கும்போது நாம் என்ன செய்வது?"

முருகமுதலியார் இப்போது பழைய குரலில் பேசினார்; "சந்தியாகால பூசையைச் சரியாகச் செய்யும் இடத்துக்கு ஆண்டவன் பரிசை அனுப்புகிறான். கிருஷ்ணன் பாரிசாத மரத்தைச் சத்தியபாமா வீட்டில் நட, அது ருக்மிணி வீட்டில் பூத்தது மாதிரி ஆயிற்றுக் கதை" என்றார்.

சுப்பிரமணியர் கோயில் அர்ச்சகர் ஒன்றும் அறியாமல் விழித்தார்; "என்ன மாமா, இப்படிச் சொல்கிறீர்கள்? சுவாமி கனவிலே எப்படி வந்து சொன்னார்?" என்றார்.

"இது முதல் தடவை அல்ல. அவன் அடிக்கடி கனவில் வந்து உற்சாகம் மூட்டினான். அந்த அடையாளம் எனக்குத் தெரியாதா?"

"இவ்வளவு சிரமப்பட்டு உங்களுக்கு இல்லாமல் போவதா?" என்று ஒரு செட்டியார் கேட்டார்.

"நான் அல்லவா அதைச் சொல்ல வேண்டும்? எனக்காவது, உனக்காவது! இது பகவானுக்காக வந்தது. இதை அவன் சொல்கிற இடத்தில் கட்டவேண்டியது தான் நியாயம். சுப்பிரமணிய சுவாமி மட்டும் நமக்குச் சொந்தம் இல்லையா? அவர் கோயிலும் இந்த ஊரில் தானே இருக்கிறது?" குருக்கள் குழப்பம் இல்லாமல் பேசினார்.

"சொத்துக்கு உடையவரே கொடுப்பதற்குத் தடை சொல்லாதபோது நாம் சொல்வதற்கு என்ன இருக்கிறது?" என்று நாலு பேர் சொன்னார்கள்.

கடைசியில் அந்த மணியை முருகன் கோயிலில் கட்டிடம் கட்டி வைத்துவிட்டார்கள். முத்துசாமி குருக்களுக்குச் சாமிநாத குருக்களிடம் உண்டான மதிப்புக்கு அளவே இல்லை, "மாமா, நீங்கள் பெரிய தியாகம் செய்துவிட்டீர்கள்!" என்று தனியே அவரிடம் சொன்னார்; கண்ணில் நீர் ததும்பச் சொன்னார்.

உன்னால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும். சாயரட்சை அபிஷேகம் ஆரம்பிக்கும்போது இந்த மணியை அடிக்கச் சொல்லு. தீபாராதனை ஆகும்போது வழக்கமாக அடிக்கட்டும்; அபிஷேகம் ஆரம்பிக்கும்போது தவறாமல் அடிக்கச் சொல்ல வேண்டும்."

"நீங்கள் சொல்வதெல்லாம் சுவாமி சொல்வதாகவே நான் எண்ணுகிறேன்; நீங்கள் கட்டளையிடுவது போலவே செய்கிறேன்" என்றார் முத்துசாமி குருக்கள்.

அன்று முதல் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சாயரட்சை அபிஷேகம் தொடங்கும்போது மணி அடிக்கும். அது சாமிநாத குருக்கள் காதில் விழும். சிவன் கோயிலிலும் அபிஷேகம் தொடங்குவார். எல்லாவற்றையும் முடித்துவிட்டு அங்கே கர்ப்பூர ஆரத்திமணி அடிக்கிறபோது கணக்காக இங்கும் தீபாராதனை செய்வார்.

முருக முதலியார் குறை இப்போது தீர்ந்துவிட்டது. இரண்டு கோயில்களிலும் சந்தியா காலத்தில் தவறாமல் பூசை நிகழ்ந்தது. ஒருநாள் கோயிலுக்கு வந்தவர் சிரித்துக்கொண்டே "கடிகாரம் ஓடினாலும் ஓடாவிட்டாலும் சந்தியா கால பூசை இப்போதெல்லாம் கணக்காக நடந்து வருகிறதே!" என்றார்.

"ஆமாம்! தெரியாமலா சுவாமி மணியை அந்தக்கோயிலில் கட்டச்சொன்னார்?" என்று சாமிநாத குருக்கள் சொன்னார்.

'நீங்கள் செய்த தியாகம் அது' என்று சொல்ல முதலியாருக்கு வாய் வரவில்லை. ரோசம் தாங்காமல், ஆதிமுதலே அந்தக் கோயிலில் மணிகட்ட வேண்டுமென்று சங்கற்பித்துக்கொண்டு, அதைச் சிவபெருமான் கட்டளையாகச் சொல்லித் தம் காரியத்தைச் சாமிநாத குருக்கள் முடித்துக்கொண்டதை முதலியார் அறிந்தால், குருக்களுடைய தியாகத்தை மெச்சியிருப்பாரோ என்னவோ!

இராமேசுவரத்தில் ஆடி அமாவாசை

திரு. என். இராமகிருஷ்ண

" காசி முதல் இராமேசுவரம் வரை " என்பது தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழி. பாரத நாட்டில் வடக்கு, தெற்கு என்ற வேறுபாடு சமயக் கொள்கைகளில் இல்லை என்பதை இன்றும் இராமேசுவரத்தில் காணலாம். இத்தலத்தில் உள்ள திருக் கோயிலுக்கு ஆண்டுதோறும் பல லக்ஷக்கணக்கான ரூபாய் வருமானம்வருகிறது. இதில் பெரும்பகுதி வடநாட்டு மக்களால் கிடைப்பது.

இங்கே இராமன் சிவபெருமானைப் பூசித்தமையினால்இராமேசுவரம் என்ற பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டது. 'தேடிமால் செய்த கோயில் திருவிராமேச்சுரத்தை " என்பது தேவாரம். இங்கிருந்து சிலமைல் தூரத்தில் உள்ள தநுஷ்கோடியில்தான் இராமர் கட்டிய அணை ஆரம்பமாயிற்றும். சேது என்பதற்கே அணை என்று பொருள் " ஹிம சேது பரியந்தம் " என்று பாரத நாட்டின் தெற்கெல்லையாக இதையும் சொல்லுவதுண்டு.

இங்கே ஸ்ரீ இராமநாதர், ஸ்ரீ விசுவநாதர் என்று இரண்டு லிங்கங்கள் இருக்கின்றன. அநுமான் காசியிலிருந்து லிங்கம் கொண்டுவரத் தாமதம் ஏற்பட்டதால் சீதாபிராட்டி மணலினால் பிடித்துவைத்த லிங்கத்தை இராமர் பிரதிஷ்டை செய்தார். ஆனால் பின்புவந்த அநுமான் அந்த லிங்கத்தைத் தன் வாலினால் இழுத்து எடுத்துவிட முயன்றான். அவனால் அது முடியவில்லை. அவன் கொண்டுவந்த லிங்கத்தைத் தாம் நிறுவிய சிவலிங்கப் பெருமானுக்கு அருகிலேயே இராமர் பிரதிஷ்டை செய்தார். அநுமான் கொணர்ந்த லிங்கமே விசுவநாதர் என்ற திருநாமத்தைப் பெற்றது.

இந்த ஆலயத்தில் கிழக்குக் கோபுரம் மிகவும் உயரமானது. இராமநாதபுரம் அரசர்களாகிய சேதுபதி மன்னர்கள் இங்கே பல திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள். கோவிலைச் சுற்றியுள்ள பிராகாரம் மிக அழகானது. இதைச் " சொக்கட்டான் மண்டபம் " என்று சொல்லுவார்கள். வேறு கோயில்களில் இவ்வளவு நீண்ட மண்டபத்தைக் காணமுடியாது. ஒவ்வொரு பிராகாரமும் சுமார் 4000 அடி நீளம் உள்ளது.

இராமேசுவரத்தில் கோயிலுக்கு உள்ளேயும் வெளியிலேயும் பல தீர்த்தங்கள் இருக்கின்றன. இவற்றில் நீராடுவதற்கு ஒரு முறை உண்டு. சந்நிதிவீதியின் கடைசியில் சமுத்திரம் உள்ளது. கடல் துறையே முதல் தீர்த்தமாகும். அதற்கு அக்கினி தீர்த்தம் என்று பெயர். அங்கே யாத்திரிகர்கள் சங்கற்பம் செய்து கொண்டு தீர்த்த ஸ்நானத்தைத் தொடங்குவார்கள். திருக்கோயிலுக்குள்ளேயுள்ள கோடி தீர்த்தம் என்பதுதான் கடைசித் தீர்த்தம். இந்த ஊரில் தங்குபவர்கள் அதில் நீராடுவதில்லை. இதில் நீராடியபிறகு இத்தலத்தில் தங்கக்கூடாது என்ற ஐதிகம் இருந்துவருகிறது.

இராமேசுவரத்திற்கு அருகில் கந்தமாதனபர்வதம் என்ற கோயில் இருக்கிறது. இது ஒரு மணற்குன்றின்மேல் அமைந்திருக்கின்றது. இங்கிருந்துதான் அநுமன் சமுத்திரத்தைத் தாண்டினன் என்றும், இங்கேதான் இராமர் பாசறை அமைத்திருந்தார் என்றும் சொல்கின்றார்கள்.

இராமேசுவரத்தில் ஆடி அமாவாசையின்போது திருத்தேர் விழா நடைபெறும். அம்பிகைக்குப் பர்வதவர்த்தனி அல்லது மலைவளர்காதலி என்பது திருநாமம். மாசி மாதம் இங்குப் பெரிய விழா நடைபெறுகிறது

இராமர் கட்டிய அணை தர்ப்பசயனம் என்ற இடத்தில் தொடங்குவதாக ஐதிகம். அதனால் அதை ஆதி சேது என்று சொல்லுகிறார்கள். திருப்புல்லணை என்பது தர்ப்பசயனத்திற்குரிய தமிழ்ப் பெயர். இது இராமநாதபுரத்திலிருந்து ஏழுமைல் தூரத்தில் உள்ளது.

யாத்திரிகர்கள் முதன் முதலில் இராமநாதபுரத்திற்கு வடகிழக்கே உள்ள உப்பூர் என்ற இடத்திற்குச் சென்று அங்குள்ள வெயிலுகந்த விநாயகரைத் தரிசித்து அப்பால் எட்டுமைல் தூரத்தில் உள்ள நவபாஷாணம் என்ற இடத்திற்குச் செல்கின்றனர். இங்கே இராமர் நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து பூசித்ததாகக் கூறுவர். அதற்கு அறிகுறியாக ஒன்பது கற்களை சமுத்திரத்தில் காணலாம். பிறகு தர்ப்பசயனம் சென்று தரிசித்து அப்பால் இராமேசுவரம் போகிறார்கள்.

இராமர் கடலில் அணை கட்டும்பொருட்டு வருணனைத் தியானித்து தர்ப்பைப்புல்லை விரித்து அதில் சயனித்து இருந்தார். அதனால் தர்ப்பசயனம் என்று பெயர் வந்தது. இங்கே எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு ஜகந்நாதப் பெருமாள் என்பது திருநாமம். இராமர், இலக்குமணர், சீதை இவர்களின் சந்நிதியும் இருக்கின்றன. இங்கே நாக பிரதிஷ்டை செய்து பிரார்த்தனை செய்வது மிகுதியாக இருக்கிறது.

நெடுங்காலமாக, இராமேசுவரம் சென்றால் புத்திர பாக்கியம் கிட்டும் என்ற நம்பிக்கை இந்த நாட்டில் இருந்துவருகின்றது. எத்தனை பாவமானாலும் இத்தலம் வந்தால் தீரும் என்பது மக்களின் நம்பிக்கை. பாம்பனுக்கு அப்பால் உள்ள கடற் கால்வாய்க்கு "பாம்பன் கால்வாய்" என்று பெயர். இந்தக் கால்வாயில் பாலம் கட்டியுள்ளார்கள். அந்தப் பாலத்தின்மீது இரயில் போகின்றது. எந்தப் பண்டமும் இரயில் மூலமாகவே போகவேண்டும்.

பழங்காலத்தில் மக்கள் படகுகள் மூலமாகவே சென்றுவந் தார்கள். இன்று கூட்டம் கூட்டமாக ஜனங்கள் இரயிலில் இத் தலத்திற்கு வருவது வியப்பு அன்று; இதைவிட ஆச்சரியம் கோயில்! மணல்மேடாகிய இந்த இடத்தில் இவ்வளவு பெரிய கோயிலைக் கட்டியிருக்கிறார்களே, அந்த அற்புதத்தைச் சற்று நினைத்துப் பார்க்கவேண்டும்! இவ்வளவுக்கும் காரணமாக இருப்பது பக்தி. பக்தியினால் இன்னும் பெரிய காரியங்களையும் மனிதன் செய்துவிடுகின்றான்.

காசி யாத்திரை செய்கின்றவர்கள் கங்கையில் தீர்த்தம் எடுத்துக்கொண்டுவந்து இராமேசுவரத்தில் உள்ள இராம நாதருக்கு அபிஷேகம் செய்தால்தான் யாத்திரை பூர்த்தியாகும். வடநாட்டிலிருந்து வரும் யாத்திரிகர்கள் தினந்தோறும் கங்கையைக் கொண்டுவந்தவண்ணமாக இருக்கின்றார்கள். ஒருநாளாவது இராமநாதப்பெருமானுக்கு கங்கையும், காணிக் கையும் வராமல் இருந்ததில்லை.

சமீபகாலத்தில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கரா சாரிய சுவாமிகள் ஸ்ரீ சங்கர மண்டபம் ஒன்றை இராமேசுவரத்தில் கட்டியுள்ளார்கள். அக்கினி தீர்த்தம் பக்கலில் உள்ளது. இதில் துவாதசலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

கயிலைகண்ட நாள் :

ஆடி அமாவாசை தருமபுர ஆதீனத்திற்கு ஒரு பொன்னான நாள். அன்றுதான் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்திருக்கயிலாய தரிசனம் செய்தார்கள். அன்று தருமை யில் விசேஷ பூசைகளும், திருக்கயிலாய பட ஊர்வலமும் நடை பெறும். அப்பர் பெருமான் கயிலை கண்டதும் ஆடி அமாவாசை அன்றே. தற்போது தருமையாதீன ஞானபீடத்தில் எழுந் தருளியுள்ள 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் ஆடி அமாவாசையன்று சிறப்பு வழிபாடு முதலியவற்றைத் தருமையில் நிகழ்த்துகின்றார்கள்.

செய்திகள்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மதுரை மகாகும்பாபிஷேக தரிசனம்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், ஆன்மார்த்த மூர்த்தியாகிய மதுரை ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழாவை முன்னிட்டு 25—6—74 செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் பக்தர்கள் பணியாளர்கள் புடைசூழ மதுரைக்கு எழுந்தருளினார்கள். நண்பகல் 12-30 மணியளவில் மதுரை வடக்கு மாசி வீதியில் உள்ள ஆதீனத் திருமடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்கு வரவேற்பு வழிபாடுகள் நடைபெற்றன. மதுரைத் திருக்கோயில் ஆசிருதம் சிவஸ்ரீ. ம. க. சுந்தரேச பட்டர், திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர், திரு நாராயணன் செட்டியார் முதலியோர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வந்து தரிசித்து மகிழ்ந்தார்கள்.

இரவு 7 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளித் தம் திருக்கரங்களால் ஸ்ரீமீனாட்சி அம்மைக்கும் ஸ்ரீ சொக்கநாதருக்கும் அஷ்டபந்தன மருந்துகள் சார்த்தி அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டார்கள். இரவு 9 மணிக்கு யாகசாலையில் பூர்ணாகுதி தீபாராதனைகள் நடைபெற்றன. தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்அவர்களும், மதுரை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் பக்தர்களுடன் இருங்கிருந்து கண்ணுக்கினிய பொருளாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானை வழிபட்டார்கள்.

26—6—74 புதன்கிழமை காலை 5 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மகாகும்பாபிஷேக தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிவாசி சுவாமிகள், உயர் நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு. கோகுலகிருஷ்ணன், தமிழக அரசு, தலைமைச்செயலர், திரு. சபாநாயகம். திரு. கருமுத்து. தியாகராச செட்டியார், அறநிலைய ஆணையர் திரு. K. S. நரசிம்மன், திருமதி. சௌந்தரா கைலாசம் முதலியோர் புடைசூழ ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயில் மேல்தளத்தில் ஓதுவாரைத் திருப்பதிகங்களை ஓதச்செய்து வீற்றிருந்தார்கள்.

காலை 6-30மணியளவில் மகாகும்பாபிஷேகம் இனிது நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தரிசித்து மகிழ்ந்து திருக்கோயிலுக்குள் சென்று ஸ்ரீ மீனாட்சியம்மைக்கும் ஸ்ரீ சொக்கநாதருக்கும் நடைபெற்ற கட அபிஷேகங்களையும் தரிசித்து மகிழ்ந்து தருமைத்திருமடத்திற்குஎழுந்தருளி உடன் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானைப் பூஜித்து வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

வேளூரில் சம்வத்சராபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 7—7—74 ஞாயிற்றுக்கிழமை திருவோண நக்ஷத்திரம் கூடிய நன்னாளில், சம்வத்சராபிஷேகம், வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், ருத்ரஜெபம் முதலியவற்றுடன் நண்பகல் பன்னிரண்டு மணியளவில் சிறப்பாக நிகழ்ந்தது. ஸ்ரீவைத்தியநாதப்பெருமானுக்கு பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ தையல்நாயகிக்கு நவசத்தியர்ச்சனையும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் ஸ்ரீ ஆறுமுககுமாரருக்கும் சண்முகார்ச்சனையும், ஸ்ரீ விநாயகருக்கும், ஸ்ரீ அங்காரகருக்கும் சகஸ்ரநாமார்ச்சனையும், மண்டப தீபாராதனையும், நடைபெற்றன. மாலை வழிபாட்டுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் முதலியன வழங்கினார்கள். அன்று இரவு ஸ்ரீ செல்வமுத்துக்குமாரர் வெள்ளி ரதத்திலும், சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகள் படிச்சட்டத்திலும் ஆக பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி பிராகாரத்தில் வலம் வரும் காட்சி நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் உடன் எழுந்தருளி வழிபட்டு, புழுகுகாப்பு தரிசனம் செய்து தருமைக்கு மீண்டருளினார்கள்.

அன்று மாலை 6 மணி அளவில் மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் தருமையாதீனத் தமிழ்ப் புலவர், டாக்டர், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச். டி. வேளூர்த் திருப்பதிகங்கள் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டுமகிழ்ந்தனர்.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நாயன்மார்கள் குருபூஜை விழா

சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 6—6—74 அன்று திருஞானசம்பந்தர், திருநீலநக்க நாயனார், திருநீலகண்டயாழ்ப்பாணர், 25-6-74 அன்று அமர்நீதி நாயனார் ஆகிய நாயன்மார்கள் குருபூஜை விழாக்கள் கொண்டாடப்பெற்றன. விசேஷ வழிபாடுகளும் புராண விரிவுரைகளும் செய்யப்பெற்றன. அன்பர்கட்கும், குழந்தைகட்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 19—6—74 புதன்கிழமையன்று வேலூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும்விழா தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தப் புலவர்மணி திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிலையத் திருமுறை ஆசிரியர் திரு. சு. ஞானப்பிரகாசம், வித்துவான் திரு. ந. இராமலிங்கம் ஆகியோர் வேலூர்த் திருப்பதிகங்கள், திருப்புகழ் இவற்றைப் பாராயணம் செய்தனர். தலைவர் தமது தலைமை உரையில் சிவபூசையின் சிறப்பைப்பற்றிப் பேசுகையில் சண்டிகேசுவரர், குங்குலியக்கலயநாயனார், நமிநந்தி அடிகள், மூர்த்தி நாயனார் ஆகிய நாயன்மார்களைப்போல் சிவபூசை புரிய வேண்டுமென்று கூறி சமய விழாக்களைக் கடந்த இருபது ஆண்டுகளாகச் சென்னையிலும் சுற்றுபுறங்களிலும் தக்கபடி கொண்டாடி சமய உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி வருகின்ற தருமையாதீனத்திற்கு சைவ உலகமே கடமைப்பட்டுள்ளது என்று கூறினார்கள். அதன் பின்னர் வழிபாடு நிகழ்த்தி அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

மாணிக்கவாசகர் குருபூஜை விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 24—6—74 அன்று சைவ சமயாசாரியர்களுள் ஒருவராகிய மாணிக்கவாசகர் குருபூசை விழா திரு. R, E. அருணசலமுதலியார் M. A., அவர்கள் தலைமையில் நடைபெற்றது, நந்தனம் சர்க்கார் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. ச. திருநாவுக்கரசு அவர்கள் "அழுது அடி அடைந்த அன்பர்" என்ற தலைப்பில் பேசுகையில் மனம் பக்குவமடைந்தால்தான் ஈசனை அடையலாம். அதற்கு அறியாமையைப் போக்கிக் கொள்ள கல்வி பெறவேண்டும். கற்றதன் பயனாக இறைவனை நல்ல ஆசான் மூலமாக அடைதல் கூடுமென்பதற்கு எடுத்துக்காட்டாக மணிவாசகர் வரலாறு உள்ளது என்று கூறினார்கள்.

திரு. தெ. ஞானசுந்தரம் M. A., அவர்கள் "திருவாசகத் தேன்" என்ற தலைப்பில் பேசியபொழுது 'மணிவாசகர் திருவாசகத்தைத் தொடங்கும்பொழுதே "நமச்சிவாய வாழ்க, நாதன்றாள் வாழ்க, இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க" எனத் தொடங்குகிறார்.

விஞ்ஞானிகள், காலத்தை மணி, நிமிஷம், விநாடி, விநாடியில் ஒரு பாகம் என்றுதான் கூறுகிறார்கள். ஆனால் மாணிக்கவாசகரோ ஈசர் தன் மனத்தில் நீக்கமற நிறைந்திருப்பதை" இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க என்று கூறும்பொழுது விநாடியைவிட ஒருசிறு கால அளவைக் கூறியிருக்கிறார். திருவாசகத்தில் எப்பகுதியைப் படித்தாலும் மணிவாசகர் அருளனுபவ முத்திரைகளைக் காணலாம்' என்று தெரிவித்தார்கள்.

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 1974 ஜூன்மாத சமயப்பிரசார வழிபாடு திருவல்லிக்கேணி திருவேட்டீஸ்வரர் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளுக்குப் பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் தொடங்கப்பெற்றது. நிலையத் தமிழ் வகுப்பு மாணவர் கிருஷ்ணன் பேசுகையில் 'சாமான்ய மனிதனாக இருந்தாலும் அவனுக்குக் கடவுள் பக்தி இருக்குமானால் அவன் மகாத்மாவாக ஆகலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு மகாத்மா காந்தியடிகள் வரலாறு' எனக்கூறினார். அடியார்களைத் தொழுது வணங்கி அவர்களைக் காப்பாற்றினால் இறை அடியை எளிதில் பெறலாம் என்பதைத்தான் காட்டுகிறது, நாயன்மார்கள் சரித்திரமென்று திரு. க. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் கூறினார். நல்லாரிணக்கம் வாழ்க்கையைச் சரிவர நடத்த மிகவும் துணையாக உள்ளது, என்பதற்குத் தம் வாழ்க்கையையே உதாரணமாகக் கொள்ளலாமென்றும் தாம் ஸ்ரீலஸ்ரீ தருமைக் குருமணிகளையும் பனசை ஸ்ரீ காசிவாசி சுவாமிகளையும் தரிசிப்பதால்தான் தம் வாழ்க்கை செம்மையாக அமைந்துள்ளது என்றும் திரு. V. N. ஆறுமுகம் அவர்கள் பேசுகையில் கூறினார்கள்.

விநாயக சதுர்த்தி

இவ்வாண்டு ஆவணி மாதத்தில் இரண்டு அமாவாசை வருவதால் அது மலமாதமாகும். மலமாதத்தில் விரதானுஷ்டானம் செய்யக்கூடாது என்று ஆகமம், ஸ்மிருதி விதிகள் கூறுவதால் நிஜ பாத்ரபத சதுர்த்தியான புரட்டாசிமாதம் 3 ஆந்தேதி (19—9—74) வியாழக்கிழமை விநாயக சதுர்த்தி விரதம் பூஜை அனுஷ்டிக்க வேண்டும்.

S. சுவாமிநாத சிவாசாரியார்.

எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(ஆனந்தஸு ஆடிமீ 1௳ முதல் 31௳ முடிய)
(17—7—74 முதல் 18—8—74 முடிய)

ஸ்ரீ ஆனந்தஸு ஆனிமீ 32௳ சூரிய உதயாதி முதல் 35 நாழிகை 44 விநாடிக்கு ஸ்ரீ சூரிய பகவான் கடக சங்கிரமமாக மங்களவாரத்தில் முன்னிரவில் மகர லக்கினத்தில் ஆடி மாதப் பிரவேசம் செய்கிறார். சஸ்யாதிபதி செவ்வாய்; இதன் பலனாவது நாட்டில் சிவந்த தானியங்கள் நெல், துவரை, கடலை வகைகள் பலிதமாகும். இராஜ்யத்தில் போர் வீரர்கள் தியாக உணர்வுடையவர்களாவர். குரு வீட்சண்யத்தால் உலகில் அதர்மம்; நீங்கும் தர்மம் ஓங்கும். தர்மஸ்தாபனங்கள் ஆஸ்திக சங்கங்கள் மூலம் உயர்ந்தோர் சான்றோர்களின் உபன்யாசம் பிரசங்கங்களால் நாட்டில் நேர்மை ஏற்படும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் நல்ல பலனை உண்டாக்கும். குடும்பம் சிக்கனமாக நடக்கும் திட தைரியம் ஏற்படும் சத்துரு பங்கம் ஏற்படும். விவகாரத்தில் திருபணார்த்தங்கள் ஏற்படும் இம்மாதம் 2 ஆம் தேதிக்குமேல் சரீர சௌக்கியம் உண்டாகும். மேலோர் தாட்சண்ய சகாயம் ஏற்படும்,

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களில் கார்த்திகை மிருகசீர்ஷத்தில் பிறந்தவருக்கு மத்திம பலனாக நடக்கும். உரோகணியில் பிறந்தவருக்கு வித்துவதுவத்தால் சில நன்மைகள் ஏற்படயேதுவுண்டு. மாத முற்பகுதியில் தனவரவும் மகிழ்ச்சியும் ஏற்படும். களத்திர புத்திரர்கள் சுகமுடன் இருப்பார்கள், இம்மாதம் 25௳ முதல் ரஜஸ் அதிக வீரியமடைவதால் ஆண் பெண் சேர்க்கை தவிர்த்தல் நலம்,

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனை உண்டாக்கும். உத்தியோகத்தில் கடும்போக்கு காட்டினும் சிறப்புடைய தாகும். கடின உழைப்பால் சிலர் நற்பலனடைவர். விகிதானுகூலங்களால் சந்தோஷம் ஏற்படும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சாதாரண பலனைத்தரும். சுக போகம் நன்றாக இருக்கும். தொழில் துறையில், உத்தி யோகத்தில் ஊக்கத்தை உண்டுபண்ணும் வித்துவதுவத்தில் குறைகள் நீங்க வழியேற்படும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் இம்மாதம் சாதாரண பலனாக இருக்கும். வரவும் செலவும் சமமாக இருக்கும். இந்த ராசிக்கு ஸ்ரீ சுப்பிரமனிய சகஸ்ரநாம அருச்சனை செய்வதால் சுகம், பாக்கியம் ஏற்படும். விபத்து நீங்கும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சென்றமாதத்தைவிட சற்று மேன்மை ஸ்திதியை ஏற்படுத்தும். தனபாக்கியம் விருத்தி யடையும். வியாதி குணமாகும். இம்மாதம் 25 ஆம் தேதிக்கு மேல் ரஜஸ் அதிக வீரியம் அடைவதால் ஆடியில் ஆண் பெண் சேர்க்கையைத் தவிர்த்தல் நலம்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்பம் மேன்மையுறும். கணவன் மனைவி சந்தோஷம் மேலிடும். கௌரவம், தன்மதிப்பு மேலானதாகும். பிதாவழி அல்லது அத்தை குடும்பத்தின் லேவாதேவி ஏற்படச்செய்யும். அரசாங்கத்தில் சிறப்புப்பெயர் உண்டாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சமபலனைக் கொடுக்கும். சென்ற மாதத்தைவிட இம்மாதம் 11 உக்குமேல் நலமாக இருக்கும் வித்வத்துவத்தில் அரசாங்கத்தில் விகிதானுகூலங்களை உண்டாக்கும். காரியப்பளுவாக இருந்தாலும் இம்மாதம்

2 ஆம் தேதிக்குமேல் சுலபமாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சமபலனைக் கொடுக்கும். பிறர் உதவியால் தனம் வரும். ஜீவன, லிகித ஒப்பந்தங்களால் நிர்ப்பந்த நிலைமையாகும். காரியம் தாமதமாகும். ஏமாற்றம், மனக்கிலேசம் ஏற்படும். இருப்பிட கிலேசம் இருந்துவரும்.

10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைக் கொடுக்கும். தனலாபம் சித்திக்கும். புத்திர ஜீவன விஷயங்களில் நல்ல நிலைமை ஏற்படும். பிரபலஸ்தர் விரும்புதல் ஆகும். ஓர் விபத்து உண்டாக நேரினும் தப்பும்.

11. கும்பம் – அவிட்டம் ½ - சதயம் –பூரட்டாதி–¾

கும்பராசி 9 பாதங்களும் சுபபலனைக் கொடுக்கும். உடல் வியாதி நிவர்த்தியாகும். தனலாபம் விருத்தியாகும். சகோதரர் மேம்பாடான நிலையில் இருப்பர். ஜீவனத்தில் ஏற்பட்ட கலக்கம் நீங்கச்செய்யும். கணவன் மனைவி ஒற்றுமை ஏற்படும். காரியத்தில் அடிக்கடி அலைச்சல் இருப்பினும் அனுகூலமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் இம்மாதம் நல்ல பலனைக் கொடுக்கும், தனபாக்கியம் விருத்தியாகும். சிவந்த வஸ்துக்கள் வீடு முதலியவற்றில் திருப்தியான நிலைமை உண்டாகும். மனைவி மைந்தர் இவர்களுக்கு வைத்தியம் முதலிய நிர்ப்பந்தமும் உடன் சுகமாகுதலும் ஆகும். தர்மகைங்கர்யங்களும் சுபச்செலவும் ஏற்படும்.

குறிப்பு: ஞானசம்பந்தம் திங்களிதழில் எதிர்காலம் பற்றிப் பல ஆண்டுகளாக எழுதி வந்த திருவிடைமருதூர், ஜோதிஷார்ணவம் திரு. கே. முத்துஜோதிடர் அவர்கள் 3—7—74 அன்று சிவபதம் அடைந்தார்கள். அவர்தம் ஆன்மா அமைதி பெறப் பிரார்த்திக்கிறோம்.

இம்மாதம் முதல் திருப்பனந்தாள் குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி ஆசிரியர் திரு. A. இராசமாணிக்கம் அவர்கள் எழுதுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம் பதிப்பகம்"

புத்தக விலைப்பட்டியல்

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கப் பணிபல புரிந்து வரும் தருமையாதீனம் இந்நாள்வரை தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளில் பல்வேறு துறைகளைச்சேர்ந்த 652 நூல்களை வெளியிட்டுள்ளது. இவ்வரிய நூல்களை அன்பர்கள் பலரும் பெற்றுப் பயன் அடைந்து வருகின்றனர்.

தருமையாதீன வெளியீடுகளில் தற்போது சில நூல்களே கைவசம் உள்ளன. அவற்றிற்குரிய விலை விபரம் இவ்விலைப் பட்டியலில் குறிக்கப்பெற்றுள்ளன.

சமயம், சாத்திரம், திருமுறை, இலக்கியம், ஆகமம் போன்ற பல்வேறு துறையைச் சேர்ந்த இவ்வரிய நூல்களை மீண்டும் மீண்டும் பதிப்பித்து வழங்கவும், புதிய நூல்கள் பலவற்றைக் குறைந்த விலையில் வெளியிட்டு உதவவும் திருவுளம்கொண்ட தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரால் "ஞானசம்பந்தம் பதிப்பகம்" என்ற அறக்கட்டளையை நிறுவி யருளியுள்ளார்கள்.

பட்டியலில் கண்ட நூல்களின் விற்பனைத்தொகை அனைத்தும் "ஞானசம்பந்தம் பதிப்பக" த்தையே சாரும். இத்தொகை பல் வேறு துறைகளில் உள்ள நூல்களைப் பதிப்பித்து வெளியிடப் பயன்படுத்தப்பெறும்.

ரூபாய் ஐம்பதுக்கு மேற்பட்ட மதிப்புடைய நூல்களை ஒரே நேரத்தில் வாங்குபவர்களுக்கு 15 சதம் கழிவும், புத்தக விற்பனையாளர்களுக்கு 20 சதம் கழிவும் வழங்கப்படும். வேண்டிய நூல்களுக்கு உரிய தொகையைப் பணவிடை (M O) உண்டியல் (draft) மூலம் அனுப்பி நூல்களைப் பெறலாம். V. P. P. வழி நூல்கள் அனுப்ப இயலாது. தபால் செலவுகள் தனி.

இவ்வரிய வாய்ப்பினை அன்பர்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டுகின்றோம்.

செயலாளர்,

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுர ஆதீனம் – மாயூரம் 609001
தஞ்சாவூர் மாவட்டம்.

	ரூ. பை.
திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் :	
முதல் திருமுறை (குறிப்புரையுடன்)	3—50
இரண்டாம் திருமுறை ,, ...	5—00
மூன்றும் திருமுறை ,, ...	5—75
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் ;	
நான்காம் திருமுறை (குறிப்புரையுடன்)	8—00
ஐந்தாம் திருமுறை ,, ...	8—00
ஆறும் திருமுறை ,, ...	8—00
சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் :	
ஏழாம் திருமுறை (குறிப்புரையுடன்)	8—00
மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய :	
எட்டாம்திருமுறை திருவாசகம் - திருக்கோவையார் (குறிப்புரையுடன்)	9—00
ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பா - திருப்பல்லாண்டு (குறிப்புரையுடன்)	5—50
சாத்திர தோத்திர நூல்கள் :	
அகத்தியர் தேவாரத் திரட்டு	0—75
திருமுறை அருச்சனை	0—25
மெய்கண்டான் சித்தாந்த மாநாட்டு மலர்	1—00
சிவஞானபோதம் (உரை நடையுடன்)	0—25
சிவஞான சித்தியார் சுபக்கம் (உரை நடையுடன்) ...	0—75
சிவப்பிரகாசம் (உரை நடையுடன்)	0—25
சித்தாந்த நூல்கள் 6 (உரை நடையுடன்)	0—50
திருவுந்தியாரும் இருபா இருபஃதும் (உரை நடையுடன்)	0—25
சங்கற்ப நிராகரணம் (உரை நடையுடன்)	0—50
சித்தாந்த அட்டகம்	1—50
சைவசித்தாந்த முதற்படி நூல்கள்	0 - 25
சித்தாந்த சைவ வினாவிடை	1—00
சிவபோகசாரம் (உரை நடையுடன்)	2—25
ஞானாவரண விளக்கமும் மாபாடியமும்	10—00
குருஞானசம்பந்தர் அட்டகம்	1—00

			ரூ. பை.
திருவருட்பாத் திரட்டு	...	...	1—00
செந்தமிழ்ப் பூம்பொழில் (2 ஆம் தொகுதி)	...	...	1—75
„ (3 ஆம் தொகுதி)	...	...	1—00
„ (4 ஆம் தொகுதி)	...	...	2—75
„ (5 ஆம் தொகுதி)	...	...	3—50
கந்தபுராணச் சுருக்கம்	...	...	2—00
கந்தபுராணத் திரட்டு	...	...	2—00
மண்சுமந்த திருவிளையாடல்	...	...	0—30
தாயுமான சுவாமிகள் பாடல்	...	...	2—00
திருநூல் ஐந்து	...	...	0—50
சந்தானாசாரியர் புராணம் (குறிப்புரை) உரை நடையுடன்)			0—50
திருத்தொண்டர் திருவந்தாதி	...	...	0—50
ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை	...	...	0—25
ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி	...	...	0—25
கோயில் நான்மணிமாலை	...	...	0—25
திருக்கழுமல மும்மணிக்கோவை	...	...	0—25
திருக்கயிலாய ஞான உலா	...	...	0—30
கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி	...	...	0—25
பிராசாத நான்மணிகள்	...	...	0—50
சிவக்ஷேத்திர சிவஞானக் கலிவெண்பா	...	...	0—25
காசிக் கலம்பகம்	...	...	0—25
திருக்குறள் - அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்)			1—50
கச்சபுடவெண்பா (குறிப்புரையுடன்)	...	...	0—50
தண்டலையார் சதகம்	...	...	0—50
கிளிவிடு தூது	...	...	0—25
பொன் வண்ணத் தந்தாதி	...	...	0—25
தென்கயிலை வடகயிலைத் திருப்பதிகங்கள்	...	...	0—50
திருவருட்டுறைப் புராணம்	...	...	1—50
கந்தக்கடவுள் வாழ்த்தும் வரலாறும்	...	...	0—25
திருவாலவாய்த் தோத்திரத் திரட்டு	...	...	0—25
புட்பவிதி	...	...	0—25
குருவழிபாடு	...	...	1—00
முத்துக்குமாரசுவாமி அந்தாதி	...	...	0—25
சைவானுட்டான அகவல் - சிவபூசை அகவல்	...	...	0—50
சிவபூசா விதி	...	...	1—25
துர்க்கா சப்தசதி விளக்கம்	...	...	1—00
நித்திய பூஜா லக்ஷண சங்கிரகம்	...	...	1—50
திருக்கயிலாய யாத்திரை	...	...	5—00

	ரூ. பை.
அமரநாதம்	3—00
பசுபதிநாதம்	3—00
ஜோதிர்லிங்கத் தலங்கள்	1—50
ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் கனகாபிஷேக விழாமலர்	5—00
புள்ளிருக்கு வேளூர் மகாகும்பாபிஷேக மலர்	14—00
திருவையாறு மகாகும்பாபிஷேக மலர்	5—00
ஞானசம்பந்தம் வெள்ளிவிழா மலர்	1—00
திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூசை விழாமலர் (சைவசித்தாந்தம் வினாவிடை)	2—00
பரமாணுப் புராணம்	1—25
Sri Gurugnanasambandha of Dharmapuram	1—00
The Development of Saivism in South India	2—00
Saiva - Siddhanda	1—00
திருபுவனம் மகாகும்பாபிஷேக மலர்	3—00
சேக்கிழார் நாயனார் புராணம்	0—25
பிரம சூத்திரம்	1—25
ஆனந்த வருஷப் பஞ்சாங்கம்	1—25
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி நினைவு மலர்	4—50
நால்வர் நான்மணி மாலை	0—50
திருவருட்பயன்-விளக்கவுரை	2—50
நித்திய கன்மநெறி (பொழிப்புரையுடன்)	1—50
புட்ப பலன் (குறிப்புரையுடன்)	0—25
தருமையாதீனமும் தாயுமானவர் திருக்கோயிலும் ...	0—75
சிவபூஜா விதி	1—25
மதுரைத் திருப்பதிகங்கள் (தலவரலாற்றுடன்)	2—00

அரிய வாய்ப்பு :— மூவர் அருளிய முதல் ஏழு தேவாரத் திருமுறைகளை (விலை மதிப்பு ரூ. 46—25). ஒருசேர வாங்குவோர்க்கு ரூ. 25—00க்குக் குறைந்த விலையில் தரப்படும். அஞ்சல் செலவு தனி. இத்தொகுதிக்குக் கழிவு இல்லை. வேளூர் கும்பாபிஷேக மலருக்கும் கழிவுத் தொகை இல்லை. குறைந்த தொகுதிகளே கையிருப்பில் உள்ளன. வாய்ப்புக்கு முந்துங்கள்.

வேளூரில், மண்டலாபிஷேகக் கிருத்திகை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில், 18—6—74 செவ்வாய்க்கிழமை மண்டலாபிஷேகக் கிருத்திகை விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று நண்பகல் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குச் சந்தனக் குழம்பு அபிஷேகத்துடன் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், சண்முகார்ச்சனையும் நடைபெற்றன. அபிஷேகத்தின்போது வேளூர்த் திருப்பதிகம்-திருப்புகழ்ப்பாராயணம் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி ஸ்ரீ காசிவாசி சுவாமிகளுக்கும் பக்தர்களுக்கும் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

இரவு மூன்று வெள்ளி ரதத்தில் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா நிகழ்ந்தது. வலப்பக்கம் சுவாமியும் இடப்பக்கம் அம்பாளும் நடுவில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானுமாக மூன்று வெள்ளி ரதங்களில் திருவீதியுலா வந்த காட்சி பெருமானின் சோமாஸ்கந்த வடிவத்தை நினைவுறுத்தியது. A. K. C. நடராசன் குழுவினரின் கிளாரினெட் இன்னிசை, திருமுறைப் பாராயணம் முதலியவற்றுடன் வீதியுலா நிகழ்ந்தது. திருவீதியுலாவின்போது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தாமும் உடன் வந்து, புழுகாப்பு தரிசனம் செய்து தருமைக்கு எழுந்தருளினார்கள். வீதியுலாவின்போது ஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் உடன் இருந்து வழிபட்டு மகிழ்ந்தார்கள். பக்தர்களும் அன்பர்களுமாகப் பலர் வீதியுலாவில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Devasthanam Thiruvaiyaru.

No words to express the sanctity of the dieties in the shrine and the stipendous structure. The temple has been maintained very well. I take the blessings from the temple.

(Sd) Lalitha Rajagopal,
Chairman (N. SC. AB.)
New Delhi.

18—6—74.

பார்வையாளர் குறிப்பு நகல்

தருமையாதீனம்

ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானம், குத்தாலம்

திருத்துருத்தி என்னும் குத்தாலமாகிய இத்தலத்திற்கு "கஞ்சனூர் திருவருள் தவநெறி மன்றத்தாராகிய" நாங்கள் 99 ஆவது சிறப்பு வழிபாட்டை நடத்திப் பேறுபெற்றோம்.

எங்களையும், எங்களுடன் வழிபாட்டில் கலந்துகொண்ட பனசை, ஆடுதுறை, செயங்கொண்டம் முதலான ஊர்களிலிருந்து வந்த பல அடியார்களையும் சிறப்பான முறையில் வரவேற்று ஆலயத்தில் வழிபாட்டையும் கோயில் கண்காணிப்பாளர் திறம்படச் செய்துவைத்தார்கள். கோயில் சிவாசாரியாரும், ஏனைய இறைபணியாளர்களும் செவ்வனே வழிபாடாற்ற உறுதுணையாக இருந்தார்கள்.

தருமையாதீனம் திருக்கோயில்கள் என்றாலே ஒரு தனிப்பட்ட மதிப்புடையது. கோயில் தூய்மையும், பராமரிப்பும் அலாதியானது. அதில் எள்ளளவும் பிழையின்றி, இத்திருக்கோயிலும் அடியார்களாகிய எங்களது உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டுவிட்டது. ஏனைய கோயில்களும் இதுபோன்று தூய்மையாக இருக்கவேண்டுமென்பதற்கு இக்கோயில் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் செவ்விய ஆட்சி இதனால் உலகத்துக்கு எடுத்துக் காட்டப்படுகிறது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நீடூழி வாழ்ந்து ஆலயத் திருப்பணிகளைத் தங்கள் தெய்வத்தானங்களோடு பிற கோயில்களுக்கும் விரிவு படுத்திச் சிறப்புற வாழ வேண்டுமென்று சொன்னவாரறிவார் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

(S-d) கணேசன்,
திருவருள் தவநெறி மன்றத் தலைவர்.

(S-d) மு. பெ. கோவிந்தசாமி செட்டியார்,
ஆடுதுறை அப்பர் அருள்நெறிக் கழகத் தலைவர்.

10—3—74